விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 23 வியாழக்கிழமை (09.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி· 294

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# குற்றங்கள் குவிந்த நாட்டிற்குள் சர்வதேசம் தலையிட உரிமையுண்டு

## சிரேஷ்ட சட்டத்தரணி செல்வக்குமாரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடொன்றிற்குள் மனிதகுலத்திற்கு எதிராக பாரியகுற்றங்கள் இடம்பெற்றால் அதனை கேள்விக்குட்படுத்துவதற்கு சர்வதேசத்திற்கு உரிமையுண்டு.

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச விசாரணையும் சட்டநீதியானதே என இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான நா.செல்வக்குமாரன் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சிவில் சமூக உறுப்பினர்களிற்கான மனிதவுரிமைகள் தொடர்பான பயிற்சி யாழ்.கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நேற்று காலை முதல் நடைபெற்றது. இதில் கருத்துரை வழங்கு போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1945 ஆண்டு 2 ஆம் உலக மகா யுத்தம் நடைபெற்ற போது பாரிய மனிதவுரிமை மீறல்கள் இடம் பெற்றிருந்தன. அதனை சர்வதேசம் கேள்விக்குட்படுத்தியுமிருந்தது.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு, போர்க்குற்றங்கள், யுத்த 20ஆம் பக்கம் பார்க்க....

## மொழியுரிமை மீறப்பட்டால் முறைப்பாடு செய்யுங்கள்

### யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மொழியுரிமை மீறப்பட்டால் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யுமாறு யாழ்.பிராந்திய மனிதவுரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் தி.கனகராஜ் கோரியுள்ளார்.

மொழியுரிமை மீறல்கள் யாழ்ப்பாணம் மற்றும் பிற தமிழர் பிரதேசங்களில் அதிகளவில் இடம்பெறுகின்ற போதிலும் அவை தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு 20ஆம் பக்கம் பார்க்க....

# உச்சநீதிமன்றத்தை மகிந்த தேர்தலுக்காக நாடமுடியாது

### தனிப்பட்ட விடயத்திற்கு அங்கு இடமில்லை - சரத் என் சில்வா

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாம் தடவையாக போட்டியிடுவது குறித்து உச்சநீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை ஜனாதிபதி பெற்றுக் கொள்ள முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். 20ஆம் பக்கம் பார்க்க....



## ஜெயிலில் நடைபயணம் செய்யும் ஜெ!

15ஆம் பக்கம் பார்க்க ...

## பல சேனாவின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொது பல சேனா இயக்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ராஸ்ட்ரிய ஸ்வாயம்செவக சங்க என்ற இந்தியாவின் இந்து தேசியவாத அமைப்பு நிராகரித்துள்ளது.

கடும்போக்குடைய பொதுபலசேனா இயக்கத்துடன் 20ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா விசாரணை பிரிட்டன் ஆதரவு



(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட 20ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கைக்கு எதிராக தீர்ப்பில் அநீதியாக ஐ.நா. செயற்படாது

## - ரொட்லி

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக அநீதியான முறையில் தாம் தீர்ப்பளிக்க முயற்சிப்பதாக அனுமானிக்கப்படுவதை ஐ.நா மனித உரிமை குழு நேற்று மறுத்துள்ளது.

நாடுகள் குறித்து தீர்ப்பளிப்பதும் அவற்றை ஒப்பிடுவதும் குழுவின் பணியல்ல என ஐ.நா மனித உரிமை குழுவின் தலைவர் நிஜல் ரொட்லி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடினமான மோதல் நடந்தது என்பதை குழு புரிந்து கொளகிறது. ஆனால், அங்கு தொடரும் தண்டனையில் இருந்து தப்பித்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கரிசனை 20ஆம் பக்கம் பார்க்க....

## டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளிற்கும், கிராமசேவையாளர்கள் மற்றும் பயிற்சி கிராம சேவையாளர்கள் ஆகியோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று பி.ப. 2.00 மணி தொடக்கம் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் 20ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சிகளுடன் ஒன்றுபட்டு மகிந்த அரசை தோற்கடிப்பேன்

### எதிர்க்கட்சி தலைவர் உரை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சக்திகளுடன் ஒரே கொள்கை மற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 20ஆம் பக்கம் பார்க்க....



## வார்த்தையில்தான் ஜனநாயகம் செயலில் சர்வாதிகாரம் - சி.வி

(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, வடக்குக்கிழக்கில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளது என்று அரசு கூறினாலும் தனது சர்வாதிகார போக்கை அது இன்னும் கைவிடவில்லை.

மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளை கவனிக்கத்தவறியுள்ள அரசு பெரும் எடுப்பிலான அபிவிருத்தியைக் குறித்தே கவனம் செலுத்துகிறது.

இவ்வாறு அமெரிக்க வெளிவிவகாரத்துறை அதிகாரிகளுக்கு தான் எடுத்துரைத்ததாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அதிகாரிகள் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக பிரதிநிதி ஆகியோர் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போதே வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் எதிர் கொண்டுவரும் நெருக்கடிகள், மாகாண சபையை இயக்குவதில் உள்ள சிக்கல்கள் குறித்து தான் அவர்களிடம் தெளிவுபடுத்தினார் என்று முதலமைச்சர் 20ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயா சிறை ஜோதிடர் பரபரப்பு

(சென்னை)

அம்மாவுக்கு 19ஆம் திகதி ஜாமீன் நிச்சயம் கிடைக்கும் அப்புறம் அவங்களை யாரும் அசைக்க முடியாது. அவங்க திரும்ப 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்கலை நிர்வாகத்தை மாணவர்கள் கையில் எடுக்க இடமளிக்க முடியாது

## உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தை மாணவர்களின் கைகளில் எடுக்க இடமளிக்க முடியாது எனத்தெரிவித்த உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் குழப்பகரமான நிலைமையை ஏற்படுத்திய மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

கடந்த 5 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர் விடுதியை திறந்து வைப்பதற்காக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அங்கு சென்றபோது மாணவர்கள் கலவரத்தை ஏற்படுத்தினர்.

இதற்கு மத்தியிலும் அமைச்சர் விடுதியை திறந்து வைத்தார். இச்சம்பவம் தொடர்பில் கேட்டபோது அமைச்சர் எஸ்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான நவீன வசதிகளுடன் விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டன. இதேபோன்று 60 விடுதிகள் பல்கலைக்கழகங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்ட குழப்பத்திற்கு தோல்வி கண்ட அரசியல் சக்திகள் உள்ளதோடு நூலகத்திற்கு செல்லாத கல்வியில் நாட்டம் இல்லாத மாணவர்கள் என்றும் மாணவ தலைவர்கள் என்றும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்களுமே இக்குழப்பத்தின் பின்னணியில் உள்ளனர்.

இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். பெரும்பாலான மாணவர்கள் இதற்கு ஆதரவு வழங்கவில்லை. அவர்கள் பலாத்காரமாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகங்களை உபவேந்தர்களே நிர்வகிக்க வேண்டும்.

அதனை மாணவர்கள் கையில் எடுப்பதற்கு இடமளிக்க முடியாது என்றும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். (இ)

# ஊவா மாகாண முதல் அமர்வு

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஊவா மாகாண சபையின் முதலாவது கூட்டம் இன்றைய தினம் ஊவா மாகாண முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஊவா மாகாண சபைத் தேர்தலில் தெரிவான ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

முற்பகல் 10.09 என்ற சுபநேரத்தில் ஆரம்பமாகும் கூட்டத்தில் ஊவா மாகாண ஆளுநர் சீ. நந்தா மெத்யூ கலந்து கொள்கிறார்.

ஊவா மாகாண சபைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் சார்பில் 5 தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி 13 உறுப்பினர்களை கொண்டுள்ளதுடன் மாகாண எதிர்க் கட்சித் தலைவராக ஹறின் பெர்ணான்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து ஊவா மாகாண சபைக்கு 6 முறை தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.(செ-11)

# வடக்கு மாகாணத்திற்கு வெளியே ஆசிரிய பணியாற்ற நாம் தயார்

## யாழ்.பட்டதாரிகள் அமைச்சரிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு வெளியே பணியாற்ற தயாராக உள்ளதாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மொழிமூல பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று பி.ப 12.30 மணியளவில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் மேலதிக ஆசிரிய ஆளணி காணப்படுவதால் வெளிமாகாணங்களில் கடமையாற்ற தாம் தயார் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், தான் ஏற்கெனவே இதுபற்றி அமைச்சரவையில் கதைத்ததாகவும் ஜனாதிபதி சாத்கமான இதனை பரிசீலிப்பதாக கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் வட மாகாணத்தில் வெளியே ஆசிரிய தொழிலை செய்வதற்கு பெருவாரியான பட்டதாரிகள் முன்வந்திருப்பது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் அமைச்சரவை கூட்டத்தின் போது இதை தான் மீண்டும் வலியுறுத்தி இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் எதிர்வரும் தினங்களில் ஜனாதிபதியின் வருகையின் போது விசேடமாக நடைபெறும் மாவட்ட கூட்டத்திலும் தான் இது தொடர்பாக கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

வட மாகாணத்திலேயே ஆசிரிய ஆளணி மேலதிகமாக காணப்படுவதாகவும் இதன் காரணமாக தமக்கு வட மாகாணத்தில் ஆசிரியர் நியமனம் கிடைப்பது இயலாது எனவும் அமைச்சரிடம் பட்டதாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

அத்துடன் வட மாகாணத்திற்கு வெளியே ஊவா மாகாணத்தில் சுமார் 3 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாகவும் தென் மாகாணத்தில் சுமார் ஆயிரம் வெற்றிடங்கள் இருப்பதாகவும் நாடாளாவிய ரீதியில் 50 ஆயிரம் ஆசிரிய உதவியாளர்கள் நியமிப்பதற்கு மத்திய கல்வியமைச்சு திட்டமிட்டு இருப்பதாகவும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.(செ-4)


**அறிவித்தல்**


1963ம் ஆண்டு முதல் 1995ம் ஆண்டுவரை
வெலிங்டன் சந்தியில் இயங்கிவந்த
**மொறாயாஸ் மூக்குக் கண்ணாடியகம்**
07.10.2014 இல் இருந்து மீண்டும்
அதே இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது
என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகின்றோம். முகாமையாளர்

516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 7893, 021 221 7514**
(C-8697)

**WORDS OF PEACE**

உங்கள் கண்களைத் திறவுங்கள்
பார்க்கத் தொடங்குங்கள்
கேட்கத் தொடங்குங்கள்
இந்த மூச்சு எடுத்துக் கொள்வதன் கொண்டாட்டத்தை ஏனெனில் அது உயிர் கொண்டு வருகிறது.
**மேலும் அறிந்து கொள்ள தொடர்புகளுக்கு:-0117250001**
(7992)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.தம்பிஜயா வாமதேவன்**
(அதிபர்-யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலை)

திரு.தம்பிஜயா வாமதேவன் அவர்கள்
தேசிய கல்வி நிறுவகத்தில்
06.10.2014 அன்று சிறந்த அதிபருக்கான
'பிரதீபா பிரபா'
விருதினைப் பெற்றமையை
அகமகிழ வாழ்த்துவதோடு மேன்மேலும்
பணி சிறக்க எல்லாம் வல்ல
சுன்னாகம் தாளையடி ஐயனாரை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
த.தங்கரத்தினம்
உமாகாந்தன் கோசலாதேவி,
ஸ்ரீகுலராஜா கௌசல்யாதேவி,
பரமலிங்கம் மீராதேவி, சுதன், கௌரி
(7982)

**விசேட அதிகார தத்துவம் வெறிதாக்கல்**

**இத்தால் சகலரும் அறிய,**

ஸ்ரீ லங்கா குடியரசு யாழ்ப்பாணம், தற்காலம் கனடா தேசத்தில் வசிக்கும் சின்னராசா பெண் மகேஸ்வரி ஆகிய நான், விடுமுறையில் ஸ்ரீ லங்கா வந்து நிற்கும் நிலையிலும் நான் 2010-ம் வருடம் நவம்பர் 3-ம் திகதி கனடா தேசத்தில் நொத்தாரிசு "யூட் அந்தோனிப்பிள்ளை" முகதாவில் விசேட அதிகார தத்துவம் தயாரித்து இல.259 பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம் சின்னராசா தர்மராசா என்பவரை தத்துவகாரராக நியமனம் செய்திருந்தேன். தற்போது நான் ஸ்ரீ லங்கா வந்த நிலையில் 2010.11.03-ம் திகதிய விசேட அதிகார தத்துவத்தை இன்றில் இருந்து வெற்று வெறுதாக்கி ஸ்ரீ லங்கா குடியரசின் அனைவருக்கும் அறியத் தருகிறேன். இன்றில் இருந்து என் சார்பாக சின்னராசா தர்மராசா செயற்பட முடியாது என்பதையும் தெரிவிக்கின்றேன்.

**சி.மகேஸ்வரி**
(சீ-8698)

**SPEED**
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
**ஸ்ரீமுருகன்**
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சீ-8694)

**சேல்ஸ்மன் தேவை**

எமது புடைவை நிறுவனத்துக்கு
அனுபவம் உள்ள ஆண்/பெண்
விற்பனையாளர் தேவை
**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்**
41, பெரியகடை யாழ்ப்பாணம்.
(7995)

**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**உடனடி வேலைவாய்ப்பு**
**சமையல்காரர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல றெஸ்ரோரன்ட் ஒன்றுக்கு சமையல்காரர் தேவை.
**தொடர்புகளுக்கு:-0777404883**
(7994)

**டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்**

சிவலிங்கப்புளியடியில் இயங்கிய டயானா பிளாஸ்ரிக் தொழிலகம் தற்சமயம் 108, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில் இயங்குகின்றது.
T.P:021 222 8680,
0775925088
(7968)

**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகர்ப் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் புடைவைக் கடைக்கு வேலையாட்கள் (ஆண்கள்) தேவை.
**தொடர்புகளுக்கு:-0217916270**

**தவறிவிட்டது**

167/8, 2-ம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர் எனும் முகவரியினையுடைய அற்புதராஜா யுகநிதன் (922770824V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.
**அ.யுகநிதன் 0775726737**
(7993)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மூத்த ஆசிரியர்
**திருமதி வனிதாமணி சோமசுந்தரம்**
அவர்கள்
06.10.2014 அன்று
கல்வி அமைச்சின்
நல்லாசிரியருக்கான
உயரிய விருதான **'பிரதீபா பிரபா'**
விருதினை பெற்றமையை
இட்டு அவரை மனமகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்தி மகிழ்வோர்: **ஆசிரிய நண்பர்கள்**
(7991)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த போட்டியிட்டால் நான் போட்டியிடமாட்டேன்

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவது குறித்து பரிசீலனை செய்கின்றேன் என்றும் அதற்காக கிடைக்கப் பெறும் விருப்பங்கள் மிகவும் பலமானதாக அமைந்திருக்கவேண்டும் என்றும் ஜனநாயக கட்சித்தலைவர் சரத் பொன்சேகா நேற்று தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வரும் தேர்தல்களில், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளிக்கும் படி தன்னிடம் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய தலைவர் ரணில் விக்ரமசிங்க கேட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவாராயின், நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன். காரணம் மூன்றாவது தடவையாக போட்டியிடுவதற்கு சட்டபூர்வ உரிமையோ அல்லது தார்மீக உரிமையோ அவருக்கில்லை. அது ஒரு சட்டவிரோத தேர்தலாகவே கருதப்படும்.

நாம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டோமாயின், அது எமது கட்சியை பாதிக்கும்.

எனவே கட்சியை முன்னேற்றுவதற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்காகவும் சரியான முறைமையை நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.(இ)


**இலவசமாக! 2014 O/L ஆங்கில பாட மாணவர்களைத் தயார்ப்படுத்தலுக்கான விளக்கவுரையும் பயிற்சியும்**

நடாத்துபவர் : படைப்பாளரும், எழுத்தாளரும், ஆசிரியருமான

**Isaac Jesuthaason**

இடம்: இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி, 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையில்)

காலம் : 12-10-2014 ஞாயிறு, காலை 9 - 12, மாலை 2 - 5 (இரு பிரிவுகள்)

குறிப்பு : கொப்பி, பேனை, குடிதண்ணீர் கொண்டுவரவும்.

**Isaac's Seven Step English - Step 1**

என்ற புத்தகத்திலுள்ள அடிப்படை விளக்கங்களுடன் கூடிய Simple - Present, Past, Future, Tense கள் மற்றும் தேவையான, முக்கியமான இலக்கண விடயங்கள் பற்றியே விளக்கவுரையும் பயிற்சியும் நடாத்தப்படும் என்பதால், மேற்குறிப்பிட்ட புத்தகம் கைகளில் இருக்கவேண்டியது அவசியமாகின்றது. எனவே ஏற்கனவே புத்தகம் வாங்காதவர்கள் மண்டப வாசலில் வாங்க முடியும். விலை : 350.00

இத்துடன் தமிழ் அகரவரிசையில், வினைச்சொல்லுக்குரிய, 'stem, past tense, past participle, present participle', சிங்களச்சொல் என்பவற்றுடன் நன்கு விளங்கவும் நினைவில் வைத்திருக்கவும், தமிழில் ஒரு வாக்கியம், அதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பு அனைத்தும் அடங்கிய தினமும் ஒரு பக்கம் என்ற ஒழுங்கான பழக்கத்தைக் கைக்கொண்டு வாசிக்கவேண்டிய,

**The Dictionary Book - 1**

என்ற புத்தகமும் விற்பனைசெய்யப்படும். விலை : 380.00

முக்கிய குறிப்பு :

ஆர்வமுள்ள தாய் தந்தையருள் ஒருவரும் இதில் கலந்துகொண்டு, தாய்மொழி மூலமான இலகுவான கற்கைநெறியை விளங்கி, நன்கு பரீட்சிக்கப்பட்ட வெற்றிகரமான கற்பித்தல் முறையினையும் உத்திகளையும் அறிந்துகொள்வதன் மூலம் உங்கள் பிள்ளைகட்கு நீங்களே நன்கு கற்பித்து, விளங்கவைக்க முடியும். பின்னர் நீங்கள் மட்டுமல்ல பரீட்சைகள் முடிந்ததும் உங்கள் பிள்ளைகளும் சற்றுத் துணிவுடன் கற்பித்தலில் ஈடுபடுவதன் மூலம் பிள்ளைகள் தமது அறிவினை மேலும் விருத்திசெய்து, பல்கலைக்கழக மற்றும் மேற்படிப்புக்களை ஆரம்பிக்கும்போது, பரீட்சைகளை எழுதக்கூடிய எழுத்தறிவுடனும் சரளமாக பேசக்கூடிய ஆற்றலுடனும் பத்திரிகைகளை வாசிக்கக்கூடிய தகுதியுடனும் மிளிரலாம். விளக்கமான ஆலோசனைகள் நேரில் தரப்படும். இத்தகவலை முடிந்தவரை சக மாணவர்களுக்கும் தெரிவித்து, அவர்களும் பயனடைய உதவுவது, உதவும் உள்ளங்களின் (Helping Hearts) கடமையுமாகும். பங்குபற்ற ஆர்வமுள்ளோர் சனி இரவு 8.00 மணிக்கு முன் தொலைபேசி மூலமாக பதிவு செய்யவும்.

ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த சமூக நல அமைப்புக்கள் அழைப்பு விடுக்கும் பட்சத்தில் முடிந்தவரை அவர்கள் விரும்புகின்ற இடங்களிலும் நாடாத்தப்படும். தொடர்புகட்கு : 077 0739904 (சி-8696)

மண்டப அனுசரணை : நியூ மைதிலி ஜுவல்லர்ஸ், 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திருமதி உதயமலர் இராஜேஸ்வரன்**

06.10.2014 அன்று தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கான ஜனாதிபதி விருதான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியை திருமதி உதயமலர் இராஜேஸ்வரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

(7939)

**பாடசாலை ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்.**



**பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும்**

யாழ்/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த



செல்வி ஆ.அம்சிகா
166 புள்ளி

மாணவிகளையும் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

ர.திசானி- 147, வி.நிலாஜினி- 136, ம.ஆதித்தியா- 134, ர.அபியாள்- 132, ஆ.பிரதாப் 126, க.திரிஷா- 124, வீ.அபிநயா- 113, க.கம்சிகன்- 104 ,செ.தருண் -93



செல்வி சி.நிதுசா
158 புள்ளி

ஆகியோர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர் மற்றும் கல்வியறிவூட்டிய ஆசிரியை திருமதி துஸ்யந்தி சண்முகராஜா அவர்களுக்கும் எமது பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும்.

**பாடசாலை ஆசிரியர் நலன்புரிச் சங்கம்** (7990)
**யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்.**



**அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**

யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர்

**அருட்சகோதரி ம.ஜீவந்தி**



அவர்கள் 06.10.2014 அன்று தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையையிட்டு மனதார வாழ்த்துகின்றோம். அன்பினால் மாணவச் செல்வங்களை அரவணைத்து தேசிய மட்டம் வரை பல விருதுகளை வென்று சாதனை படைத்த தங்கள் சேவையும் வெற்றியும் மென்மேலும் தொடர இறை ஆசியை வேண்டுகின்றோம்.

(சி-8695)

**பாடசாலை அபிவிருத்தி குழு -2014 (யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**


# இராசி பலன்

09.10.2014
(புரட்டாதி 23, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
பிரதமை பிற்பகல் 3.31 மணிவரை
ரேவதி முற்பகல் 9.21 மணிவரை
இராகுகாலம் -1.32-3.02 மணிவரை
சுபநேரம் - 7.32-9.02 மணிவரை
சித்தாமிர்தம்

**வளவன்**

**மேடம்:** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், வேலைச்சுமைகூடும், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு உட்பட நேரிடலாம், பிரியமானவர்களின் நலன் கருதிய செலவுகள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மைதரும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும், ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கண்ணியம் மிக்கஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் நன்மையுண்டு.

**சிம்மம்:** மறை முகப்போட்டிகள் குறைந்து தொழிலில் முன்னேற்றம் ஏற்படும், தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், திடீர் பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் இடையிடையே சில விவாதங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், செலவுகள் அதிகமாகும், போசன சுகமுண்டு.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு.

**விருச்சிகம்:** நேற்று பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்யமான நாள், உடன்பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர் வழியில் அன்புத்தொல்லைகள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவ முற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** பொன்னான நாள், தொழிலில் சிறு மன உளைச்சல் ஏற்பட லாம், மூத்தசகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபாடு கூடும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதலில் ஈடுபட்ட குழுவிடமிருந்து உயிரை பறிக்கும் ஆயுதங்கள் மீட்பு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சிப் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற குழு மோதலில் அக்குழுக்களால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை நெல்லியடிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.




இக்குழுக்களுக்கிடையிலான மோதலில் வடமராட்சிப் பகுதியில் உள்ள மூன்று கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன.

இக்குழு மோதலில் பயன்படுத்தப்பட்ட வாள்கள், கோடரி, கிரிஸ் கத்தி போன்ற கூரிய ஆயுதங்களையும் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள், தடிகள், துவிச்சக்கரவண்டி றிம் மற்றும் செயின் போன்றவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மூன்று கிராமங்களுக்கு இடையில் நடைபெற்ற இக்குழு மோதலானது தற்பொழுது இயல்பு நிலைக்கு வந்துள்ளது எனவும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இக்கிராமங்கள் எப்போதும் தமது கண்காணிப்பில் இருக்கும் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-60)




# வடக்கு மாகாண சபை முன்பாக தீர்வு கோரி மீனவர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இழுவைப் படகுத் தொழிலாளர்களுக்கு தீர்வினை பெற்றுத்தரக் கோரி இன்று வடக்கு மாகாண சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக வல்வெட்டித்துறை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த சங்கத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எங்கள் குடும்பங்கள் பாரம்பரிய கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றது. 1974 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து நோர்வே நாட்டு சீனோர் நிறுவனமே, இழுவைப் படகு தொழில் முறையை அறிமுகப்படுத்தி இருந்தது.

அன்று தொடக்கம் இன்று வரை நாம் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். 1983 ஆம் ஆண்டு போர் உச்சக்கட்டத்தை அடைந்த காரணத்தால் கடல் தொழில் மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. அப் போர்க்காலப்பகுதியில் பல நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் கடலில் கொல்லப்பட்டார்கள்.

போர் காரணமாக கடற்றொழிலாளர்கள் கடலில் இறங்க முழுமையாக தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தோடு பாஸ் நடைமுறையும் இராணுவத்தினரால் அமுல் செய்யப்பட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாண கச்சேரி முன்றலில் கடற்றொழிலாளர்களின் உண்ணாவிரத போராட்டம் 10 நாட்கள் நடைபெற்றது. இப் போராட்டத்தின் மூலம் பல கடற்றொழில் தடைகள் தளர்த்தப்பட்டன.

ஆனாலும் கடற்றொழிலை நம்பி இருக்கும் நாங்கள் பல கஷ்டங்களின் மத்தியில் இருந்த வண்ணம் உள்ளோம். இப்படி இருக்கும்வேளையில் இழுவைப்படகு தடை செய்யப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டி எமது தொழிலை மேற்கொண்டு நடத்த முடியாத வண்ணம் எமக்கு பல வழிகளிலும் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

அதாவது 2010 ஆம் ஆண்டு வர்த்தமானியில் தடை விதித்துள்ளதாக கூறி வரு கின்றனர். ஆனால் இவ் வர்த்தமானியில் இயந்திர நுட்ப இழுவைப் படகு மட்டுமே தடைசெய்யப்பட்ட தாக வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால்நாம்எமதுமனிதவலுவை மட்டுமே பிரயோகித்து இழுவைப் படகுத் தொழிலை செய்து வருகின்றோம். இத் தொழில் தடைசெய்யப்பட்டதல்ல.

இது இப்படி இருக்கும் பட்சத்தில் இலங்கையில் பல வகை யான மீன்பிடித்தொழில்கள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. இப்படி தடை செய்யப்பட்டுள்ள கடற்றொழிலைத் தடுக்க நடவடிக்கைகள் இதுவரை காலமும் எடுக்கப்படவில்லை.

ஆனால் தடை விதிக்கப்படாத எங்கள் தொழிலை மாத்திரமே குறிவைத்து இடையூறு விளைவிப்பவர்கள் கடற்படையைக் கொண்டு எமது இழுவைப்படகுகளை பிடிப்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றனர்.

இதனால் எமது குடும்பங்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாமல் நாளாந்த வாழ்வாதாரத்தை இழந்து மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனால் பசி பட்டினி, படிக்கும் மாணவர்களின் படிப்பு அனைத்தும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளோம்.

அத்தோடு தென் இலங்கையிலும் மன்னாரிலும் இழுவைப்படகு தொழில் செய்வதற்கு அனுமதித்திருக்கின்றனர். இன்று வரை மேற் குறிப்பிட்ட பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அத்தோடு தென் இலங்கை மீனவர்கள் வடபகுதி கடலில் ஊடுருவி கடல் அட்டை பிடித்தல் மற்றும் சட்ட விரோதமான தொழில்கள் அனைத்தும் செய்து வருகின்றனர் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-4)

# நெல்லியடிச் சந்தை வெள்ளத்தால் பாதிப்பு

நெல்லியடி புதிய சந்தைப்பகுதியில் மழை வெள்ளம் அதிகமாக தேங்கி காணப்படுகிறது. சந்தையின் நுழைவாயிலிலும் சந்தையின் உட்பகுதிகளும் மழை வெள்ளம் தேங்கி காணப்படுவதனால் வியாபாரிகளும் பொது மக்களும் பெரும் இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர்.



மேற்படி சந்தை சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதனால் பொது மக்கள் சந்தையில் மரக்கறிகள் வாங்குவதற்கு தயக்கம் காட்டி வருவதுடன் மரக் கறிகளும் சேதமடைந்து வியாபாரிகளுக்கு நட்டத்தையும் ஏற்படுத்துகின்றது.

இதனை கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையிடம் பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-60)

# நன்றிகள் ஆயிரம் பாடல் வெளியீடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்துவின் இளசுகள் அணியினரால் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நன்றிகள் ஆயிரம் பாடல் கடந்த 7 ஆம் திகதி காலை பாடசாலையில் வைத்து வெளியீடு செய்யப்பட்டது.

இது இந்துவின் இளசுகளினுடைய ஒன்பதாவது படைப்பாகும். உருவாக்கப்பட்ட நன்றிகள் ஆயிரம் பாடலை இந்துவின் இளசுகள் அணி வெளியீடு செய்து வைக்க அதிபர் தயனந்தராஜா பெற்றுக் கொண்டார்.

பின்னர் இந்தப் பாடல் இறுவெட்டு அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் தினப் பரிசாக வழங்கப்பட்டது.




இந்த வெளியீட்டுக்கான அனுசரணையை யாழ் இந்துவின் சுவிஸ் பழைய மாணவர் ராஜ்மோகன் வழங்கியிருந்தார்.

பாடலுக்கான ஒலிப்பதிவை சத்தியன் கோபாலகிருஷ்ணன் மேற்கொண்டிருந்தார். வரிகளை இந்துவின் இளசுகள் அமைப்பும் இசையை தனபாலசிங்கமும் மேற்கொள்ள பாடலை மயூரேசன் மற்றும் சேயோன் பாடியிருந்தனர். (இ-23)

# கரணவாய் கிழக்கு விவசாய சம்மேளன நிர்வாகத் தெரிவு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கரணவாய் கிழக்கு விவசாயசம்மேளனத்தின்நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

இதன்போது தலைவராக க.சி.அச்சலிங்கம், உப தலைவராக எஸ்.சிவயோகநாதன், செயலாளராக பிரான்சிஸ் சேவியர், பொருளாளராக பொ.இராமநாதன், வட்டச்செயலாளராக க.செல்லத்துரை ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ச.வசீகரன், க.செல்லத்துரை, ச.யோ.புவிராசசிங்கம், எஸ்.கதிரவேலு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கரணவாய் கிழக்கு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (இ-60)

# ஊர்காவற்றுறை பிரதேச பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதம் மற்றும் தேசிய வாசிப்பு மாதத்தின் புத்தாண்டு நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு எழுவைதீவு பொது நூலகங்கள் இணைந்து பல்வேறு போட்டிகள், நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றன.

பாடசாலை மாணவர்கள் பொது மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் கட்டுரைப் போட்டி, திறந்த வெளி ஓவியப் போட்டி, வாசிப்புப்போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, சஞ்சிகை ஆக்கம், கவிதைப்போட்டி, பொது அறிவுப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

மேலும் கொடி மாதம் அனுஷ்டித்தல், சுவரொட்டிகள், பதாகைகளை காட்சிப்படுத்தல், கருத்தரங்கு நடத்துதல், நூல்கொள்வனவு, நூல்சேகரிப்பு திறந்த வெளி புத்தக கண்காட்சி மற்றும் விற்பனை, புத்தக அஞ்சல் ஓட்ட நிகழ்வு, நூலக சிரமதானம், சலுகை கட்டணத்தில் அங்கத்தவர்களை இணைத்தல், மரநடுகை, பயன் தரு வீடியோ படக்காட்சி போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் பற்றிய விபரங் களை குறித்த பிரதேச நூலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் இறுதிநாள் நிகழ்வின் போது வழங்கப்படும் என்று தேசிய வாசிப்பு மாதம் செயற்குழு அறிவித்துள்ளது. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சம் வெயிட் பண்ணுங்க அரசியலுக்கு நான் வருவேன்!

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் "உடம்பை அதிகம் அலட்டிக்கொள்ளாமல் ஒரு படம்' என்பது மட்டும்தான் ரஜினியின் பிளான். அதைச் சுற்றி "லிங்கா கோட்டை' கட்டிவிட்டார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்.

படத்தில் இரண்டு ரஜினிகள். இருவருமே இளமைத் தோற்றத்தில்தான் வருவார்கள். ஆச்சரியமாக, படத்தில் ரஜினிக்கு பிரத்யேக "பன்ச்' டயலாக் இல்லையாம். ஆனால், கதையின் சூழலுக்குப் பொருத்தமான "பன்ச்'கள் ஏராளம் தாராளம். இன்ஜினீயர் ரஜினி அணை கட்டும்போது வரும் பிரச்சினையில் அவருக்கு உதவ ஊர் மக்கள் தயங்கி நிற்பார்கள். "எனக்கு இந்து, முஸ்லிம், கிறிஸ்டியன், நாடார், செட்டியார், தேவர்னு யாரும் வேணாம்... "இந்தியன்' மட்டும் என்கூட அணை கட்ட வாங்க!' என ரஜினி சொல்வது ஒரு சாம்பிள்!

தமிழ் சினிமாவில் "பொங்கல் பாடல்' வந்து மாமாங்கம் ஆகிவிட்டதே. அந்தக் குறையைப் போக்க, பொங்கல் விழாவுக்கு ரஜினியும் சோனாக்ஷி சின்ஹாவும் ஆடும் கலகல டூயட் களைகட்டும்.

வழக்கமாக ரஜினி பட ஓப்பனிங் ஸாங்கை எக்கச்சக்க ஜூனியர் ஆர்டிஸ்ட்கள் புடைசூழ பிரமாண்டமாகப் படம் பிடிப்பார்கள். அது பெரும்பாலும் ஆந்திரா அல்லது கர்நாடகா பகுதிகளில் நடக்கும். ஆனால் "லிங்கா'வின் ஓப்பனிங் ஸாங் வெளிநாட்டில் படமாகியிருக்கிறது.

கர்நாடகாவில் படப்பிடிப்பில் இருந்த போது ரஜினியைச் சந்தித்திருக்கிறார் தமிழ்க சேனல் உரிமையாளர் ஒருவர். "லிங்கா' படத்தைத் தன் பட நிறுவனமே மொத்தமாக விலைக்கு வாங்கிக்கொள்வதாகவும், சாட்டிலைட் உரிமையையும் தனக்கே தர வேண்டும் எனவும் ரஜினியிடம் கேட்டாராம். ஆனால் ரஜினி எந்த உறுதி மொழியும் தரவில்லையாம்.

> **அரசியல் அனல், சொத்துக் குவிப்பு தீர்ப்புக் கனல்... இதற்குச் சமமாக கோடம்பாக்கத்தில் எகிறுகிறது ரஜினியின் "லிங்கா'**
> **-ஜூனியர் விகடன்-**

படப்பிடிப்பு இடைவேளையில் ரஜினியிடம் தான் இயக்கிக்கொண்டிருக்கும் "வைராஜாவை' படத்தின் சில காட்சிகளைப் போட்டுக்காட்டி இருக்கிறார் அவர் மகள் ஐஸ்வர்யா. "நல்லா பண்ணிருக்கேம்மா' என ரஜினி முகம் மலர்ந்து பாராட்ட, "அப்பா உங்களை இயக்க, இன்னும் ஒரே ஒரு சான்ஸ் எனக்குக் கொடுங்க. டைரக்ஷன் நான், மியூசிக் அனிருத். மத்த ஆட்களெல்லாம் நீங்க சொல்றவங்கதான்!' எனக் கோரிக்கை வைக்க "பார்க்கலாம்மா...' என்று மட்டும் சொல்லிச் சிரித்திருக்கிறார் ரஜினி.

கர்நாடகாவில் இருந்த ரஜினியை அந்த மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பா, பி.ஜே.பி-யின் முன்னாள் மாநிலத் தலைவர் ஈஸ்வரப்பா இருவரும் சந்தித்து நீண்டநேரம் பேசியிருக்கிறார்கள். அதன் பின்னரே "பி.ஜே.பி-யில் ரஜினி' என்ற செய்தி சூடு பிடித்தது.

தொடர்ந்து கர்நாடகாவில் ஷூட்டிங்கில் இருந்தபோது, பேரன் லிங்காவை ரொம்பவே மிஸ் பண்ணியிருக்கிறார் ரஜினி. அதனால் லிங்காவின் சேட்டைகளை ஐஸ்வர்யா வீடியோ எடுத்து அனுப்ப, அதை மீண்டும் மீண்டும் பார்த்து மகிழ்கிறார்.

ரஜினியைச் சந்தித்த பெங்களூரு ரஜினி ரசிகர் மன்ற பொறுப்பாளர் இளவரசன், "நீங்க அரசியலுக்கு வரணும் தலைவா!' எனச் சொல்ல, "என்னை இந்த அளவுக்கு


குடும்பத்தினருடன் ரஜினி

வளர்த்தவங்க நீங்கதான். உங்களுக்கு எதுவும் செய்யாம நான் போயிட மாட்டேன். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க' எனப்பதில் கொடுத்திருக்கிறார்.

ரஜினியின் தற்போதைய செல்லம், டால்மேஷன் நாய். போயஸ் கார்டனில் இருக்கும் அவரது ஆபிஸ் வாயிலின் துவாரக பாலகன் இந்த டால்மேஷன்தான். லதா, ஐஸ்வர்யா, சௌந்தர்யா எல்லோரையும்விட ரஜினியைக் கண்டால் குஷியாய் குதிக்கிறது டால்மேஷன்.

இமயமலைக்கு யாத்திரை செல்லும் போது தங்குவதற்குச் சொந்தமாக ஓர் இடம் வாங்கி, தியானமண்டபம் கட்ட வேண்டும் என்பது ரஜினியின் கனவு. தனக்குப் பிடித்த மாதிரி அந்த இடத்தையும் வாங்கிவிட்டார். ஆனால், உடல் நிலையைக் காரணம் காட்டி, குடும்பத்தினர் அவரது இமயமலைப் பயணத்துக்குத் தடை விதித்து இருக்கிறார்கள்.

இதனால் சென்னையில் இருக்கும் போது மதியம் சாப்பாட்டுக்குப் பின் குட்டித் தூக்கம் போட்டுவிட்டு, நாலு மணிக்கு தனது இன்னோவா காரில் கிளம்பி, சென்னையின் வீதிகளில் நிதானமாக உலா வருகிறார். நன்றாக இருட்டிய பின் மெரினா பீச்சில், ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் கடலைப் பார்த்து மௌனமாக அமர்ந்து வேடிக்கை பார்க்கிறார்.

மௌனம் கலைப்பாரா சுப்பர் ஸ்டார்?

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (A.R.V.) வெவ்வேறு இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை ஆறுகால்மடம் பழம் வீதியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை ஆறுகால் மடம் சனசமூக நிலையத்திலும், நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை செழியன் வீதியிலும்முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அராலி வீதியிலுள்ள புதிய குடியிருப்பு சனசமூக நிலையத்திலும் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை ஜின்னா வீதியிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஆசாத் வீதியிலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி Mo ஒழுங்கைப்பகுதியிலும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை கெனடி வீதி, சேமக்காலை வீதியிலும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நாவலர் 1ஆம், 2ஆம், 3 ஆம் குறுக்குத் தெருவிலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி நாவாந்துறை தபாற்கந்தோர் அருகிலும் 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை வசந்தபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நித்திய ஒளி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை சூரிய வெளியிலும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை சென்.நீக்கலஸ் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கோவில் ஒழுங்கையிலும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை கடற்கரை வீதி காதி அபூபக்கர் வீதி சந்தியிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை கண்ணாபுரம் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கண்ணாபுரம் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் குறுக்குத்தெருவிலும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை சோலைபுரத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கற்குளம் வீதியிலும் 24 ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை வெள்ளாந் தெருவிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சிவன் பண்ணை வீதி, கொட்டடி சனசமூக நிலைய கலையரங்கத்திலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை சீனிவாசகம் வீதி கொட்டடி சனசமூக நிலையத்திலும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடமாடும் சேவையும் இடம் பெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:47 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்தொ.இ: B/1884 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 3 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/2758 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 44 3/4 செவ் 8 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்தொ.இ: B/1886 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 32 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/2759 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 46 1/4 செவ் 1 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/(இத்தாலி NOT PR)<br>தொ.இ:B/1888 | பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழிலA/L உதவிகணக்காளர்<br>தொ.இ: G/2760 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 03 செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BSC/லண்டன்<br>தொ.இ: B/1889 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 23 செவ் 8 இல் தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G/2761 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவளிக்கும் முட்டாள்தனத்தை மீண்டும் செய்யோம்

## ஜே.வி.பி திட்டவட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் முட்டாள் தனத்தை மீண்டும் செய்ய மாட்டோம் என ஜே.வி.பி.யின் வடமத்திய மாகாண சபையின் உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பிரீமன் வீதியில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பகிரங்க மேடைகளில் ஜே.வி.பி கட்சியை விமர்சனம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் கோரியிருந்தார்.


ஜே.வி.பி கட்சி தொடர்பில் ஜனாதிபதிக்கு திடீர் கருணை மலர்ந்துள்ளது. கடந்த ஊவா மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் பின்னடைவை சந்தித்தது. அதனைத் தொடர்ந்து ஜே.வி.பி. மீது அரசாங்கத்தின் கரிசனை அதிகரித்துள்ளது.

ஒரு தடவை செய்த முட்டாள் தனத்தை மீளவும் செய்ய நாம் தயாரில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூன்றாம் தடவையாக போட்டியிட அரசியல் அமைப்பில் எவ்வித இடமும் கிடையாது.

அரசியல் அமைப்பிற்கு எதிராக ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டால் பாரியளவில் போராட்டம் நடத்தப்படும். பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் மீது தாக்குதல் நடத்திய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தனவிற்கு பாவமன்னிப்பு பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி மகிந்த அவரை வத்திக்கானுக்கு அழைத்துச் சென்றார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலின் போது விமல் வீரவன்ச தேசிய சுதந்திர முன்னணியின் பஞ்சாயுத சின்னத்தில் போட்டியிட்டார். தேர்தல் மேடைகளில் ஜனாதிபதியை கடுமையாக விமர்சனம் செய்தார்.

தற்போது மீண்டும் ஜனாதிபதியின் பக்கத்தில் சென்று அமைதியாக இருக்கின்றார். ஜனாதிபதியுடன் நெருக்கமான மேர்வின் சில்வாவும் ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிக்க நிபந்தனைகளை விதித்துள்ளார் என வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (இ)



கவனிப்பாரின்றியிருந்த கொக்கிளாய் அரசவைத்திய சாலைக்கு– வைத்தியசாலை நிர்வாகத்தின் கோரிக்கையின் படி மருந்துகளை பாதுகாக்கும் நோக்கில் கனடாவின் அன்புக் கரங்கள் தமிழர் இணையத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட குளிரூட்டியினை வைத்தியசாலை மருத்துவர் பிரசாந்தனிடம் வலிவடக்கு பிரதேச சபைஉபதலைவர்எஸ்.சஜீவன் கையளித்தார். இதில் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் கலந்து கொண்டிருந்தார்.

# திறனாய்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தால் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டி நடத்தப்படவுள்ளது. யாழ்.கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்விப்பிரிவு உள்ள 91 பாடசாலைகளை உள்ளடக்கிய செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டுப்போட்டி ஒன்றை நாளை 10 ஆம் திகதி நடத்தி அதன் மூலம் அவர்களின் உடல் உள ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து எதிர்காலத்தில் சிறந்ததொரு மகிழ்ச்சிகரமான மாணவர் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் முதன்முறையாக அமுலுக்கு கொண்டு வரும் வகையில் மேற்படி திறனாய்வு நிகழ்வு நடை பெறவுள்ளது என யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 100 |
| தக்காளி | 80 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 50 |
| கோவா | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 120 |
| போஞ்சி | 160 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 |


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 160

அபி ரேகா

சில உறவுகள் இவ்வுலகில் என்றும் அழியாதவை,
அந்த உறவுகள் தான் நண்பர்கள்!



டினோ ராஜ்



ராகுலன் பாலா



கரோலின் கெனி




கஜேந்திரன்

தாத்தா:- அந்தக் காலம் மாதிரி வராதுடா பேராண்டி

பேரன்:- ஏன் தாத்தா?

தாத்தா:- அந்தக் காலத்துல என்னை கடைக்குப் போகச் சொல்லி எங்கம்மா என் கையில ஒரு ரூபாய் தான் கொடுப்பாங்க

பேரன்:- சரி

தாத்தா:- நா அதுக்குள்ளேயே அரிசி, புளி, காய்கறி, பழம் எல்லாம் வாங்கிட்டு கடைசியில சாக்லேட்டும் வாங்கி சாப்பிடுவேன்

பேரன்:- அப்படியா?

தாத்தா:- ஆமாண்டா, இப்பச் சொல்லு, இதெல்லாம் இந்தக் காலத்துல நடக்குமானு?

பேரன்:- நிச்சயமா முடியாது தாத்தா, இப்பத்தான் எல்லாக் கடையிலயும் கேமரா வச்சிருக்காங்களே.. திருடுனா காட்டிக் கொடுத்துடும்

தாத்தா:-???


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

# மட்டுப்படுத்தப்பட்ட ஆலோசனையை மட்டுமே தன்னால் வழங்கமுடியுமாம்

## ஜனாதிபதி ஆலோசனைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆலோசனைகளை மட்டுமே வழங்ககூடிய நிலையிலுள்ளேன் என காணமற்போனோர் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர் அஹமெர் பிலால் சூபி தெரிவித்துள்ளார்.



அக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சர்வதேச குழுவில் இடம் பெற்றுள்ள பாகிஸ்தானியரான சூபி இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டபோது.

ஆணைக்குழுவின் ஆணை என்னை மட்டுப்படுத்தப்பட்ட அளவு ஆலோசனைகளை வழங்குவதற்கே அனுமதிக்கிறது.

மேலும் ஆணைக்குழு விரும்பும் போது, தனக்கு எமது ஆலோசனை அவசியம் என கருதினால் மாத்திரமே நாங்கள் ஆலோசனை வழங்கலாம். இதற்கு அப்பால் எதுவுமில்லை.

சில விடயங்களை சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்களின் ஆராய்வதற்கான தேவை எழும்போது மாத்திரம் எனது ஆலோசனை கோரப்படும்

இலங்கை ஆணைக்குழு அந்த விடயங்களில் மாத்திரம் எனது ஆலோசனையை எதிர்பார்க்கின்றது. நான் அதனையே வழங்குவேன்.

ஆணைக்குழுவின் விசாரணைகளில் தலையிடவோ, அல்லது சம்பந்தப்பட்ட மக்களை சந்திக்கவோ எனக்குரிமையில்லை.

எனது ஆலோசனை அவர்களுக்கு எவ்வளவு காலத்திற்கு தேவைப்படும் என தெரியாது. எனக்கு அவர்கள் இது குறித்து தெரிவிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (இ)

# 82 விசைப்படகுகள் பறிமுதல்

## பிரதமரை சந்தித்து முறையிட தமிழக மீனவர்கள் திட்டம்

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்க செல்லும் போது எல்லையை தாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படையினர் அடிக்கடி தமிழக மீனவர்களை கைது செய்து வருகின்றனர். மேலும் மீனவர்களின் விசைப் படகுகளும் பறிமுதல் செய்யப்படுகிறது. மத்திய, மாநில அரசுகளின் கோரிக்கையை ஏற்று இலங்கை அரசு தமிழக மீனவர்களை விடுவித்தாலும், விசைப் படகுகளை விடுவிக்க மறுத்து வருகிறது.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து இதுவரை தமிழக மீனவர்களின் 82 விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர். அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் அங்கு பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளதால் பெருமளவு சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே படகுகளை விடுவிக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் மீனவர்களின் கூட்டமைப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், காரைக்கால் ஆகிய 6 மாவட்ட மீனவ பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் இலங்கையில் உள்ள 82 விசைப்படகுகளை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியையும், வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜையும் சந்தித்து முறையிடுவது என்றும், நாளை தமிழக மீன்வளத்துறை அமைச்சரை சந்தித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ)

## அமரர் வன்னியசிங்கத்தின் 103 ஆவது பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் 103 ஆவது பிறந்த தினமும் கல்வி உதவித் தொகை வழங்கல் நிகழ்வும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நீர்வேலி சந்தியிலுள்ள வாழைக் குலைச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 40 மாணவர்களுக்கான ஐப்பசி மாத கல்வி உதவித் தொகையும் வழங்கப்படவுள்ளது. (இ

# மத்திய அரசாங்கமே மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

மீன்பிடி சார்ந்த பிரச்சினைகளுக்கு காரணமாக அமைபவர்கள் மத்திய அரசாங்கமே அவர்களே அவற்றைத்தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை கிழக்கு மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையான இழுவைப்படகினை மீண்டும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று கோரி அண்மையில் உண்ணாவிரத போராட்டத்தினை மேற்கொண்டனர். அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்பதையும், அவற்றுக்குத் தீர்வுகாணுமாறும் வலியுறுத்தி 160 இற்கு மேற்பட்ட மீனவக்குடும்பங்களைச்சேர்ந்தவர்கள் வல்வெட்டித்துறையில் அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். எமது தாயகப்பிரதேசத்திலுள்ள ஆழ்கடற்பிரதேசங்களில் கடற்படையினரின் உதவியுடன் தென்னிலங்கை மீனவர்களாலும், இந்திய மீனவர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு எமது கடல்வளங்கள் சுரண்டப்பட்டு சூறையாடப்பட்டு வருகின்றது.


இந்தநேரத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையைப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் எமது மீனவர்கள் சிலர் இப்பொழுது பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் சட்டத்தைத் அறிந்தவர்களுடன் உரையாடுகின்ற போது , ரோலர் மீன்பிடி முறையிலும் இயந்திரங்களைப்பாவிக்காமல் கைகளால் வலையை இழுத்து தமது தொழிலை மேற்கொள்ளும் போது, அது சட்ட விரோதமானதல்ல எனத்தெரிவித்துள்ளனர்.

இந்த மீன்பிடி முறையைப்பின்பற்றுபவர்களுக்கு சட்டத்தின் உதவியுடன் அவர்களுக்குரிய நீதி விரைவாக கிடைக்கவேண்டும். அதுவரைக்கும் அவர்களுக்குரிய இடைக்கால நிவாரணங்கள் சரியான முறையில் வழங்கப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

எனினும் இவற்றையெல்லாம் செய்ய வேண்டிய மத்திய அரசாங்கம் தான செய்ய வேண்டிய கடமையைச்செய்யாமல், அதிகாரங்கள் எதுவும் அற்ற எமது மாகாண சபையே மக்களுக்கு துரோகம் இழைக்கிறது என்பதான பொய்த்தோற்றப்பாடு ஒன்றை ஏற்படுத்தி மக்களைக்குழப்பி வருகின்றது.

ஆனால் எமது மக்கள் மிகவும் தெளிவான முறையில் வெளிக்காட்டியுள்ள இந்த ஒற்றுமை உணர்வை மிகப்பெரிய அளவில் கட்டியெழுப்பி தங்கள் உரிமைக்காக, இவை தொடர்பான அதிகாரங்களையுடைய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுக்கக்கூடிய அளவிற்கு ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-23)

# பின்னோக்கிய கால்கள்



சாதாரண இயல்புடைய குழந்தைகளை விட மாற்றுத் திறனாளிகளான குழந்தைகள் அதிக புத்திசாலிகளாக மிளிர்வார்கள் என்பதை பல சம்பவங்கள் பறைசாற்றியுள்ளன. அதற்கு இவரும் ஓர் உதாரணம்.

பிறக்கும் போதே பின்னோக்கிய கால்களுடன் பிறந்த சீன பெண்ணொருவர், சாதாரண மனிதர்களை விடவும் திறமை வாய்ந்தவராக காணப்படுகின்றார்.

சீனாவில் சோங்கிங் எனும் பகுதியில் வசித்து வரும். வேங் பேங் (வயது 30) எனும் பெண் பிறக்கும்போதே பின்னோக்கிய கால்களுடன் பிறந்தார்.

இவரால் நடக்க முடியாது என மருத்துவர்கள் கூறியுள்ளனர். ஆனால் இப்பெண் மற்றைய நண்பர்களை விடவும் வேகமாக ஓடக்கூடியவராகவுள்ளார்.

என்னால், என்னுடைய மற்றைய நண்பர்களை விட வேகமாக ஓடமுடியும். நான் உணவகமொன்றில் கடைமை புரிகின்றேன். என்னுடைய காலணிகளை தலைகீழாக அணியும்போது அதுவொரு விததியாசமான அனுபவமாக இருககின்றது. நான் அனைவரை போல இருக்கமாட்டேன் என்று வைத்தியர்கள் கூறினாலும் தற்போது என்னை பற்றி உலகமே பேசுகிறது என்பதை நினைத்து பெருமையடைகின்றேன் என அப்பெண் தெரிவித்துள்ளார். (இ)

# ஜெயலலிதாவின் நிலைமை மன வேதனை அளிக்கிறது

## தமிழீழ அரசின் பிரதமர் தெரிவிப்பு

தமிழ்நாட்டின் முன்னாள முதலமைச்சர் செல்வி ஜெய லலிதா மீது பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 100 கோடி ரூபா அபராதமும் விதித்து அளி த்துள்ள தீர்ப்பின் பிரகாரம் அவர் முதல்வர் பதவியினை இழந்து சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வு தமிழீழ மக்களுக்கு மிகுந்த மன வேதனையைத் தருகிறது.

இந்த நெருக்கடியான நிலை யைச் சட்டரீதியாக எதிர் கொண்டு மீண்டும் தமது அரசியல் வாழ்வில் அவர் வெற்றி பெறுவார் என நாம் உறுதியாக நம்புகிறோம்' இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அ.தி.மு.க. வின் உத்தியோகபூர்வ பத்திரிகையான நமது எம். ஜி.ஆர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செல்வி ஜெயலலிதா கடந்த 2011 ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக நான்காவது தடவை பதவியேற்ற பின்னர் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவான, உறுதியான, துணிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்து வந்தவர். ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றக் காரணமாக இருந்தவர்.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாகியிருக்கும் தமிழீழ மக்களால் தமக்கான ஒரு பாதுகாப்புக் கவசமாக உணரப்பட்டவர். தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல தமிழக மக்களின் வளமான எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு நல்லபல திட்டங்களை நிறைவேற்றி வந்தவர். இத்தகையதொரு நிலையில் ஜெயலலிதா தண்டனைக்குள்ளாகியிருப்பது மிகுந்த மனவேதனையைத் தருவதாக உள்ளது.

1996 ஆம் ஆண்டில் இருந்து 18 வருடங்களாக நடைபெற்று வந்த ஜெயலலிதா மீதான வழக்கின் மீது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு கடுமையானதெனப் பலரும் கருதுகின்றனர்.

நீதிபதி சட்டத்தின் எல்லையைத் தாண்டி இத் தண்டனையை வழங்கியுள்ளதாக இந்தியாவின் புகழ் பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணியான ராம் ஜெத் மலானி கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தத் தீர்ப்பினை ஜெயலலிதாவினது அரசியல் எதிரிகள் வரவேற்கக்கூடும். ஆனால் சட்ட அறிஞரான தன்னால் ஏற்க முடியாதுள்ளது' எனவும் அவர் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ)

# வரவு செலவுத்திட்ட அறிக்கையினை வடமாகாண சபை தயாரித்துள்ளது

வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வரவு செலவுத்திட்ட அறிக்கை அமைச்சர்களின் அங்கீகாரத்துடன் ஆளுநரின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம்காலை கைதடியிலுள்ளபேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

கல்வி,சுகாதாரம்மீன்பிடி மற்றும் வர்த்தகவாணிபம், விவசாயம் உட்பட நான்கு அமைச்சர்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற துறைகள் அனைத்திற்கும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வரவு செலவுத் திட்ட அறிக்கை சபையின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டு சபையின் ஏகோபித்த ஆதரவுடன் வடக்கு மாகாண ஆளுநருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதேவேளை இவ்வருட வரவு செலவுத்திட்ட அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் வடக்கின் அபிவிருத்திக்கு செலவழிக்கப்படவில்லையெனவும் உறுப்பினர்கள் சிலர் அதற்கான திட்டங்களை வழங்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

947





எனக்கு சீமையல் செய்றதுனா ரொம்ப பிடிக்கும் ஆனா அம்மா கிச்சன் பக்கம் விட மாட்றாங்க. நான் கையை சுட்டுக்குவேன் எண்ணெயைக் கொட்டிடுவேனு சொல்றாங்க. நான் பெரிய பொண்ணுதானே பத்திரமா சமைக்கிறேன்னு சொன்னா கேட்க மாட்றாங்க. எப்பதான் என்னை சமைக்க விடுவாங்களோ தெரியல.

வி.ஸ்மிதா

## சுட்டி மனசு

எனக்கு ஊஞ்சல் ஆட ரொம்ப ஆசை. ஒரு தடவை ஊஞ்சல் ஆடுறப்போ கீழே விழுந்துட்டேன். அதனால என்னை ஊஞ்சல் ஆடவே விட மாட்றாங்க. பூங்காவுல மத்த பசங்க விளையாடும்போது நாமளும் இதுபோல ஜாலியா விளையாட முடியலையேனு ஏக்கமா இருக்கு!

ஆர்.தன்யாஸ்ரீ







தினமும் பேப்பர் படிக்க ஆசை. ஆனா, எங்கப்பா வாங்கித் தர மாட்றாங். எப்போதாவது என் ஃப்ரெண்டுக்கிட்ட வாங்கிப் படிப்பேன். நீ படிக்க மாட்டே, 'படம் பார்த்துக்கிட்டே இருப்பேங்கிறாங்க. அதுல என்ன தப்பு? படம் பார்க்காம எப்படி செய்தியை மட்டும் படிக்கிறது? ஏன் இப்படிச் சொல்றாங்கன்னே தெரியலை?

செ.ரோஷ்னி

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2014
09


- 1003 - லெயிஃப் எரிக்சன் கனடாவில் லான்ஸ் ஒக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கி, அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1604 - சுப்பர்நோவா 1604 பால் வெளியில் கண்டுபிடிக்கபட்டது.
- 1760 - ஏழாண்டுப் போர்: ரஷ்யா பெர்லின் நகரைப் பிடித்தது.
- 1771 - டச்சு சரக்குக் கப்பல் பின்லாந்துக் கரையில் மூழ்கியது.
- 1799 - லூட்டின் என்ற கப்பல் நெதர்லாந்தில் 240 பேருடனும் 1,200,000 பெருமதியான பொருட்களுடனும் மூழ்கியது.
- 1804 - டாஸ்மானியா தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1806 - ரஷ்யா, பிரான்ஸ் மீது போர் தொடுத்தது.
- 1820 - கயாக்கில் ஸ்பெயினிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1835 - கொழும்பு றோயல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1854 - ரஷ்யாவில் செவஸ்தபோல் மீதான தாக்குதலை பிரித்தானியா, பிரான்ஸ், மற்றும் துருக்கியப் படைகாள் ஆரம்பித்தன.
- 1888 - வோஷிங்டன் நினைவுச் சின்னம், அக்காலத்தில உலகின் உயரமான கட்டடம், வோஷிங்டன் டிசியில பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது.
- 1910 - மாறுவேடத்தில் உலகப் பயணம் மேற்கொண்ட பின்னர் வ. வே. சு. ஐயர் புதுச்சேரி திரும்பினார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப நகரம் ஜேர்மனியிடம் வீழ்ந்தது.
- 1941 - பனாமாவில் இடம்பெற்ற புரட்சியின் பின்னர் ரிக்கா ர்டோ டெலா கார்டியா அதிபரானார்.
- 1962 - உகாண்டா பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1970 - கம்போடியாவில் கெமர் குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1981 - பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.
- 1987 - யாழ்ப்பாணத்தில் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் முரசொலி நாளிதழ் கடடடங்களை இந்திய இராணுவத்தினர் தகர்த்தனர்.
- 1989 - ரஷ்யாவின் வரோனியொஷ் அருகில் ஒரு பறக்கும் தட்டு இறங்கியதாக சோவியத் ஒன்றிய செய்தித் தாபனம் அறிவித்தது.
- 2001 - இந்தியாவில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- 2004 - ஆப்கானிஸ்தானில் முதற்தடவையாக ஜனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.
- 2006 - வடகொரியா தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியது.

### பிறப்புகள்

- 1897 - எம். பக்தவத்சலம், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (இ. 1987)
- 1924 - இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலைவர். (இ. 1957)
- 1940 - ஜான் லெனன், ஆங்கிலப் பாடகர், இசையமைப்பாளர் (இ. 1980)
- 1945 - விஜய குமாரணதுங்க, இலங்கையின் சிங்கள திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ. 1988)
- 1968 - அன்புமணி ராமதாஸ், தமிழக அரசியல்வாதி

### இறப்புகள்

- 1943 - பீட்டர் சீமன், டச்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1865)
- 1967 - சேகுவேரா, ஆர்ஜென்டீனிய கெரில்லாத் தலைவர் (பி. 1928)
- 2003 - ஏ. ரி. பொன்னுத்துரை, இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் (பி. 1928)




வீட்டுல எந்தப் பொருள் கேட்டாலும் வாங்கித் தர மாட்றாங்க. நீ 80 மார்க் வாங்கினா வாங்கித் தர்றேன்னு அப்பா சொல்வாரு. ஆனா 100மார்க் வாங்கினாக்கூட வாங்கித்தர மாட்டாரு. எனக்கு எது வேணும்னாலும் பந்தயம் கட்டி அதுல ஜெயிச்சாதான் கிடைக்குது அதுவும் லேட்டா!

சு.கமல்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சர்தனை நாயகனின் சரித்திரம்




...சாதாரணமாகக் காலியாக இருக்கும் குடியரசுத் தலைவர் மாளிகை அன்று கூட்ட நெரிசலால் அல்லோகலப்பட்டது. விருது வழங்கப்பட்ட பிறகு சம்பிரதாயமாக தேனீர் வழங்கப்படும்.' இந்த நிகழ்ச்சியைப் பார்த்த ஒரு செய்தியாளருக்கு ஒரு அதிர்ச்சி. விருந்தில் கலந்துகொண்ட அனைவரும் சச்சினை மொய்த்துக்கொண்டு ஆட்டோ கிராஃப் வாங்க முண்டியடித்துக் கொண்டு நிற்க, நமது குடியரசுத் தலைவர் தன்னந்தனியாக- சுற்றி யாருமே இல்லாமல் தேனீர் குடித்துக்கொண்டு இருந்தார். வந்த கூட்டம் அனைத்தும் சச்சினுக்குத்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

கிரிக்கொட் முன்னோடிகளில் ஒருவரான டபிள்யூ ஜி.கிரேஸ் நூற்றி ஐம்பதாவது பிறந்த நாளை ஒட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் 1998 ஆம் ஆண்டு கண்காட்சி போட்டி ஒன்று நடந்தது. உலக அணி மற்றும் எம்.சி.சி. அணிகளுக்கு இடையேயான இந்தப் போட்டியில் உலக எம்.சி.சி. அணி கேப்டனாக அதெர்டன். இவரது அணியில் இந்திய வீரர்களான அசார், கும்ப்ளே, ஸ்ரீநாத், கங்குலி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

**சச்சின் எங்கள் அணியில் தான் என்று சச்சின் திறமைகளை அசாருதீன் வர்ணித்து மகிழ்ந்தார்.**




சச்சின் 114 பந்துகளில் 125 ரன்கள் எடுத்தார். இவரது ஆட்டத்தைப் பார்த்த அதெர்டன் கிரேஸ் கூட சச்சின் போல் ஆடியிருப்பாரோ என்பது சந்தேகம்தான். சச்சின் ஆடியது அபாரம் என்றார். இந்தப் பாராட்டை விட இன்னும் கொஞ்சம் அதிகமாக கிரேசின் நூற்றி ஐம்பதாவது பிறந்தநாள் போட்டி போல் சச்சினின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவின்போது இதுபோல் லார்ட்ஸ் மைதானத்தில் போட்டி நடக்க வேண்டும் என்றும் வாழ்த்தினார்.

ஒரே நாளில் இரண்டு தேர்வுகள் நடந்தால் மாணவன் நிலை எப்படி இருக்கும். அதுபோல் காமன்வெல்த் நாடுகளுக்கு இடையேயான போட்டிகள் மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரிலும், சஹாரா கோப்ஸ்பக்கான போட்டிகள் கனடா நாட்டின் டொரொண்டோவிலும் ஒரு கால கட்டத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டன. இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் இந்திய கிரிக்கெட் வாரியம் ஒருவரை ஒருவர் கலந்தாலோசிக்காமல் இந்த முடிபை எடுக்க எந்தெந்த வீரர்கள் எங்கு விளையாடுவது என்ற சிக்கல் எழுந்தது. சச்சின் மற்றும் அணியினருக்கு டொரண்டோ போகத்தான் ஆசை. காரணம், அதுதான் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டம், மலேஷிய ஆட்டம் வெறும் காட்சி ஆட்டம் அவ்வளவு தான். ஆனால், அரசின் ஆதரவு இந்திய ஒலிம்பிக் சங்கத்திற்கு இருந்ததால் சச்சின் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் கோலாலம்பூருக்கு வேண்டா வெறுப்பாகப் பயணித்தனர். இந்திய முன்னணி வீரர்கள் இல்லாததால் இந்திய அணி பாகிஸ்தானிடம் 4-1 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது. கடைசி ஆட்டத்திற்கு மட்டும் சச்சின் வந்திருந்து 77 ரன்கள் அடித்தார்.

## கருமமே கண்ணாயினர்

இங்கு நடைபெற்ற ஒருநாள் போட்டிகளின்போதுதான் சச்சின் தனது முந்தைய சாதனைகளை முறியடித்தார். 1996 இல் 32 போட்டிகளில் 1611 ரன்கள் தற்போது 1998 இல் 34 போட்டிகளில் சச்சின் எடுத்தவை 1894 ரன்கள். சராசரி 65% மொத்தம் 9 செஞ்சுரிகள், 7 ஐம்பதுகள்.

டாக்கா போட்டிகளை முடித்துக் கொண்டு மீண்டும் கோக்ககோலா கோப்பைக்காக ஷார்ஜா பயணம். ஜிம்பாக்வேவிற்கும் இந்தியாவிற்கும் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சச்சின் மீண்டும் ஒருநாள் போட்டிகளில் தனது இருபதாவது செஞ்சுரியை பதிவு செய்தார். ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார். அவர் விளையாடிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதுவரை அடித்தவை 36 செஞ்சுரிகள். அதுவரை மொத்தம் 35 செஞ்சுரிகள் அடித்திருந்த கவாஸ்கர், ரிச்சர்ட்ஸ், ஹேன்ஸ் ஆகியோரின் சாதனை முறியடிக்கப்பட்டது. இது தவிர இன்னொரு சாதனையும் சச்சின் செய்திருந்தார். அவர் விளையாடிய மொத்தம் 207 போட்டிகளில் மொத்தம் 32 முறை ஆட்டநாயகன் விருதுகளைப் பெற்றிருந்த ரிச்சர்ட்டின் சாதனை அன்று தவிடுபொடியானது.

(தொடரும்)

**கே. ரமேஷ்**

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்


...புரிந்துகொள்ளுங்கள். குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்பட வேண்டிய முதல் விடயம் கடவுள் என்பது அன்பு என்று.

உங்களால் கடவுளைத் தழுவ முடியவில்லை என்றால், நீங்கள் தழுவுவதற்கு வேறெதுவும் இல்லை; ஏனெனில், எல்லாமே கடவுள்தான்! நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கடவுளைத் தழுவ முடியாது என்று சொல்லிக்கொடுக்கும் பொழுது நீங்கள் உண்மையிலேயே கடவுள் மற்றவற்றிலிருந்து வேறானவர் என்று சொல்லித் தருகிறீர்கள். கடவுளை ஒரு பீடத்தில் வைப்பதன் மூலம், உண்மையிலேயே நீங்கள் உங்களை முழு பிரபஞ்ச இருப்புத் தன்மையிலிருந்தே வேறுபடுத்திக் கொண்டு விடுகிறீர்கள். நீங்கள் எல்லாவற்றையுமே தவறவிட்டுவிடுகிறீர்கள்!

தேவையான சமயத்தில் கொஞ்சம் சமூக அறிவுடன், மரியாதை என்னும் விளையாட்டை விவேகத்துடன் விளையாடுங்கள், அவ்வளவே. இதுபோன்ற மரியாதை, ஆழமான விழிப்புணர்வுடனும் அறிவுடனும்தான் வரும் என்பதை கவனத்தில் வையுங்கள். ஆனால், அது மையத்திலிருந்து உங்கள் கவனத்தைத் திருப்பாது. அது உங்கள் அன்பில் குறைவேற்படக் காரணமாகாது. அது ஒரு வெறும் அறிவின் செயலாக மட்டுமே இருக்கும், அவ்வளவு தான்.

ஒரு சின்னக்கதை...

ஒருதாய் தன் குழந்தையுடன் ஒரு பொது நிகழ்ச்சிக்குச் சென்றாள். எப்படியோ அந்தக் குழந்தை தொலைந்து விட்டது. கூட்டத்தில் [illegible] விட்டனர். மிகவும் [illegible] குழந்தையை எல்லா இடங்களிலும் தேடினாள். திடீரென்று அவளுக்குப் பின்னாலிருந்து மரியா! மரியா என்றழைக்கும் ஒரு குரலைக் கேட்டாள், திரும்பினாள்; தன் மகளைக் கண்டாள். குழந்தையிடம் ஓடிச்சென்று [illegible] அவள் கேட்டாள், [illegible] ஆனால், நீ ஏன் என்னை அம்மா என்று கூப்பிடாமல் மரியா என்று கூப்பிட்டாய்? குழந்தை சொன்னது, அதனால் எந்தப் பயனும் இருந்திருக்காது. இங்கு நிறைய அம்மாக்கள் இருக்கிறார்கள்!



குழந்தைகள் இன்னும் தங்களுக்குள்தான் மையம்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மை விட அதிக உயிர்ப்புடனும் அதிக விழிப்புடனும் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் சுலபமாக வெளியே வந்துவிடுகிறார்கள்.


## ஆன்மீகம் 39

அவர்களது கள்ளம் கபடமற்ற தன்மை. அவர்களது அன்பு, அவர்களது உடல்மொழி ஆகியவை அவர்களுக்காகப் பேசுகின்றன. அவர்களது, வார்த்தைகள் அல்ல. மனம் சமூக நெறிப்படுத்தல்களுடன் கால் பதிக்கும் போது கள்ளம் கபடமற்ற தன்மை மறைந்துவிடுகிறது. பிறகு அதனை வார்த்தைகளாலும் நடிப்பாலும் ஈடு கட்ட வேண்டும். ஏனெனில் எப்படி முழுமையாகவும் கள்ளம் கபடமற்றும் இருப்பது என்பதை மறந்துவிட்டோம். அன்பு கடமையாகும் பொழுது அது ஒரு சுமையாகி விடுகிறது.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டத்தின் துணையோடு தமிழ்நாடு வருவார் ஜெ!

## தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் நம்பிக்கை

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு வழங் கப்பட்டது இறுதி தீர்ப்பு அல்ல. ஜெயலலிதா சட்டத்தின் துணையோடு வெகுவிரைவில் தமிழ் நாடு வருவார் என்று ஓ.பன்னர்செல்வம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அ.தி.மு.க. பொருளாளரும், முதல் அமைச்சருமான ஓ.பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

சட்டத்தின் மீதும், நீதித்துறையின் மீதும் அபார நம்பிக்கை கொண்டுள்ளவர் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா.

காவிரி பிரச்சினை, முல்லை பெரியாறு பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகளை சட்டப்போரின் மூலம் சாதித்துக் காட்டிய ஜெயலலிதா, தனக்கு ஏற்பட்டுள்ள தடைக் கற்களை படிக்கற்களாக மாற்றி, தான் குற்றமற்றவர் என்பதை நிரூபித்து மீண்டும் ஜொலிப்பார்கள். மிளிருவார்கள், தமிழ நாட்டை ஆளுவார்கள் என்பதில் எள்ளளவும் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இலலை.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தற்போது தமிழ்நாட்டில் இல்லாத சூழ்நிலையைப் பயன்படுத்தி, ஜெயலலிதாவின் பாதையில் நடைபெறும் அ.தி. மு.க.வுக்கு அவப்பெயரும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன.

தமிழக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், அ.தி.மு.க. அரசின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக ஜெயலலிதாவின்வழியில்செயற்படும் அரசின் மீது சட்டம ஒழுங்கு குறித்து பொய்க் குற்றச் சாட்டுகளை கூறி வருகின்றனர்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கு எள்முனையளவும் இடம் கொடுக்காத வகையில் அ.தி.மு.க.வினர் நடந்து கொள்ள வேண்டும் என இந்த தருணத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சியினை, "சட்டத்தின் ஆட்சி" என்பதையே குறிக்கோளாக கொண்டுள்ள ஜெயலலிதாவின் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. அரசு நிச்சயம் முறியடிக்கும். தற்போது, ஜெயலலிதாவுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு இறுதித்தீர்ப்பு அல்ல.

தனது வாதத்திறமையால், உறுதிகொண்ட நெஞ்சினால், நேர்மைக்குணத்தால் தமிழக நலன்களுக்காக பல வழக்குகளில் ஜெயலலிதா உச்ச நீதிமன்றம் வரை சென்று வெற்றி பெற்று இருக்கிறார்கள். இந்த வழக்கிலும் ஜெயலலிதா வெற்றி பெறுவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஜெயலலிதா சட்டத்தின் துணையோடு வெகு விரைவில் தமிழகம் வருவார். எனவே, எவ்வித போராட்டத்திலும் ஈடுபட வேண்டாம் என்று ஜெயலலிதா மீது உயிரையே வைத்துள்ள, எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் இரத்தமான கழக உடன் பிறப்புகளை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறுஓ.பன்னீர்செல்வம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ).

# சிறையிலிருப்பவர்கள், மாபியாக்களின் ஆதரவு மத்திய அரசுக்கு தேவையில்லை

## பிரதமர் மோடி பரபரப்பு பேச்சு

சிறையில் இருப்பவர்களின் ஆதரவு எங்களுக்குத் தேவையில்லை என்று அரியாணா தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பகிரங்கமாகப் பேசியதன் மூலம், ஜெயலலிதாவை நேரடியாக எதிர்க்க மோடி முடிவு செய்து விட்டார் என தெரிவிக்கப்படுகிறது. ஜெயல்லிதா கைது விவகாரத்தால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை பயன்படுத்திக்கொள்ள மாநில கட்சிகள் மட்டுமன்றி தேசிய கட்சிகளும் தீவிரமாக பணியாற்றி வருகின்றன.

குறிப்பாக, தமிழகத்தில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திவிடலாம் என பாஜக கருதுகிறது. அதன் முதற்கட்டமாகத்தான் கடந்த உள்ளாட்சித் தேர்தலில் பெரிய கட்சிகள் எல்லாம் புறக்கணித்த நிலையில் அதிமுகவை எதிர்த்து பாஜக போட்டியிட்டது. பல இடங்களில் அதிமுக பாஜக இடையே கடும் மோதல்கள் ஏற்பட்டன. அப்போது முதல் பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்திர ராஜன், அதிமுகவை கடுமையாக விமர்சித்து வருகிறார்.

தற்போது ஜெயலலிதா சிறையில் இருக்கும் நிலையில் தமிழகத்தில் அதிமுகவை எதிர்த்து முழு வீச்சுடன் செயற்படும்படி பாஜகவினருக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளதாக அக்கட்சியின் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் அரியாணா தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய மோடி, 'எனது அரசு மக்களின்ஆதரவில இயங்கி வருகிறது. எங்களுக்கு சிறையில் இருப்பவர்களின ஆதரவுதேவையில்லை. அதே போல் மாபியாக்களின் ஆதரவும் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நரேந்திர மோடிக்கு பில்கேட்ஸ் பாராட்டு

கழிவறை அவசியம் குறித்து பிரதமர்மோடிக்கு மேலாக வேறு எந்த இந்திய பிரதமரும் விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை என்று மைக்ரோசொப்ட் நிறு வனர் பில் கேட்ஸ் தெரிவித்தார்.

கடந்த மாதம் இந்தியா வந்திருந்த மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டாவும் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினர். அவர்கள் இருவரும் இணைந்து நடத்திவரும் பில் மெலிண்டா கேட்ஸ் அறக் கட்டளையின் முயற்சிகள் தொடர்பாக சுமார் ஒரு மணி நேரம் மோடியுடன் அவர்கள் ஆலோசித்தனர். இந்த நிலையில் தனது இணையதளத்தில் பிரதமர் மோடி உடன் பேசியது குறித்து பில் கேட்ஸ் விபரித்துள்ளார்.


இம்ப்ரெஷன்ஸ் ஒப் இந்தியா என்ற தலைப்பில் அவர் தெரிவித்ததாவது ,உலகம் முழுவதிலும் சுமார் 2.5 கோடி மக்கள் கழிவறை வசதி இல்லாமல் வாழ்கின்றனர். இந்தியாவில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அங்கும் பல கிராமங்களில் இந்த அவலம் நீடிக்கிறது. இதனால் ஏற்படும் பாதிப்பு மிகவும் மோசமானது, பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழலையும் ஏற்படுத்தக்கூடியது.

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா வந்தபோது அவரது சிறப்பாக, கறுப்புப் பணத்தை மீட்பதில் உறுதி, பொருளாதார வளர்ச்சி, இந்தியாவின் முன்னேற்ற நடவடிக்கை என பலவற்றை குறிப்பிட்டு "த நியூயோர்க் டைமஸ்" பத்திரிகை எழுதி இருந்தது. ஆனால் என்னை பொறுத்தவரையில், இந்தியா சுதந்திரம் பெற்றது முதல், கழிப்பறை அமைப்பது குறித்து நரேந்திர மோடியை விட சிறப்பான பிரசார நடவடிக்கைகளை வேறு எந்த இந்திய பிரதமர்களும் மேற்கொண்டதில்லை.

இந்திய மக்கள் கழிவறையின் அவசியம் குறித்து சிந்திக்கவும், அவர்கள் அது குறித்து பேசவும் மோடி வைத்துள்ளார் என்றால் அது தான் அவரது வெற்றி என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

# மகிழ்ச்சிக்கு பின் ஏற்பட்ட சோகம்!

# போராட்டத்தில் குதித்த அ.தி.மு.க





சொத்துக்குவிப்பு வழக்கில ஜெயலலிதாவுக்கு பிணை கிடைத்துவிட்டதாக முதலில் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடிய அ.தி.மு.க.வினர் பின்னர், பிணை மறுக்கப்பட்ட தகவலையடுத்து கோபமடைந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயலலிதா உட்பட 4 பேரின் பிணை மனு மீதான விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம்விசாரணைக்கு வந்தது.

ஜெயலலிதா உட்பட 4 பேரின் வழக்கறிஞர்களின் வாதம் முடிவடைந்ததையடுத்து, அரசு சட்டத்தரணி பவானி, ஜெயலலிதாவுக்கு பிணை வழங்க எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும், இதனால் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டு விட்டதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதை பார்த்து அ.தி.மு.க.வினர் தமிழகம் முழுவதும் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஆனால், அவர்களின் சந்தோஷம் சிறிது நேரம் கூட நீடிக்கவில்லை. ஜெயலலிதாவுக்கு பிணை மனு நிராகரிக்கப்பட்டதாக அதிகார பூர்வமாக தகவல் வெளியானது. இதையடுத்து, அ.தி.மு.க.வினர் அங்காங்கே வீதி மறியலில் ஈடுபட்டனர். அவர்களை கட்டுப்படுத்த பொலிஸார் திணறினர்.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதா இல்லம் முன்பு கூடிய அ.தி.மு.க.வினரும் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். ஆனால், பிணை மறுப்பு தகவலை கேட்டு விரக்தி அடைந்த அ.தி.மு.க.வினர் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

### பேருந்து கண்ணாடி உடைப்பு

திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலை அரிய மங்கலம் பாற்பண்ணை வழியாக மதுரையிலிருந்து சென்னைக்கு செல்லும் கர்நாடக பதிவு எண் கொண்ட கே.பி.என் பேருந்துமீது, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு மர்மநபர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினர். இதில் பேருந்தின் முன்பக்கம் முற்றிலுமாக கண்ணாடி சிதறியது. இந்த தாக்குதல் சம்பவம் குறித்து அரியமங்கலம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், நாமக்கல், திருச்சங்கோடு உள்ளிட்ட பல பகுதிகளில் பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதேபோல், ஜெயலலிதாவுக்கு பிணை மறுக்கப்பட்டதையடுத்து, திண்டுக்கல்லில் சென்று கொண்டிருந்த ஒரு பேருந்து மீது அ.தி.மு.கவினர் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதில் அந்த பேருந்தின் கண்ணாடிகள் உடைந்தன. இதேபோல், பழனியில் கர்நாடகா பதிவு எண் கொண்ட ஒரு பேருந்து மீதும் கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

### கோவிலில் தீ

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காளையர்கோவில் பகுதியில் உள்ள சொர்ண காளீஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேகத்திற்காக மராமத்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதற்காக கோவிலை சுற்றி ஓலை தட்டியால் அடைக்கப்பட்டிருந்தது. அப்போது, ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப் பட்டதாக செய்தி வெளியானதையடுத்து, அங்குள்ள அ.தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து கொண்டாடினர். இந்த பட்டாசின் தீப்பொறிகள் கோவிலில் வைக்கப்பட்டிருந்த ஓலை தட்டிகளின் மீது விழுந்து திடீரென தீப்பிடித்தது. அப்போது திடீரென அப்பகுதியில் மழை பெய்ததால் தீ மேலும் பரவாமல் அணைக்கப்பட்டது இதனால்பெரிய சேதம் தவிர்க்கப்பட்டு ள்ளது.

இருப்பினும், அ.தி. மு.க.வினர் கோயிலுக்கு தீ வைத்து விட்டதாகக் கூறி இந்து முன்னணியினர் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. (இ)

## பாரதச் செய்தி


# பதிலடி கொடுப்பதற்கு படையினருக்கு உத்தரவு

ஜம்மு-காஷ்மீர் மாநில எல்லைப் பகுதியில் பொது மக்கள் வாழும் இடங்களிலும், பாதுகாப்பு படையினரின் நிலைகள் மீதும் பாகிஸ்தான் படை தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இவ்வாறு தாக்குதல் நடத்தி வருவதால் அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் பதிலடி கொடுக்க படையினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. நேற்றுமுன் தினம் பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெட்லியை முப்படை தளபதிகள் சந்தித்து பேசியுள்ள நிலையில், இந்த அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை பாகிஸ்தான் ஒட்டுமொத்தமாக நிறுத்தும் வரை பேச்சு வார்த்தையையும் இரத்து செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தரப்பு கொடி சந்தப்புக்கு நேற்று முன்தினம் அழைப்பு விடுத்த போது இந்தியா அதை நிராகரிததுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் ஆக்கத்திறன் ஊக்குவிப்பு

# நுண்ணறிவு விருத்திக்கு வழிசமைக்கும்



ஆக்கத்திறன் என்பது ஒரு செயனமுறையாகும். அதற்குச் சுருக்கமான வரை விலக்கணத்தினை உருவாக்குவது கடினமாகும். ஆக்கத்திறன் நுண்ணறிவுக் குட்பட்டதாகவே கருதப்பட்டது. ஆக்கத்திறன், கற்பனை, சுயசிந்தனை எனும்சொற்கள நீண்டகாலமாக நூல்களில் இடம்பெற்று வந்துள்ளன. ஆனால்நுண்ணறிவு பற்றிய கற்றல் இடம்பெற்ற பின்னரே ஆக்கத்திறன் எனும் துறையில் நாட்டம் ஏற்பட்டது. ஏனெனில் 19 ஆம் நூற்றாண்டிலே அநேக உளவியலாளர்கள் ஆக்கத்திறனை நுண்ணறிவின் ஒரு பாகமாகக் கருதினர். டேர்மன் என்பவர் கன்வர்ட் சோதனையின்படி 140 இற்கு மேல் நுண்ணறிவு ஈவையுடைய குழந்தைகளை ஆராய முயன்றனர். அவரது ஆய்வு நூல் மேதைகளின் பரம்பரையலகு பற்றிய கற்றல் எனும் பெயரில் வெளியாகியது. இவ்வாறு ஆக்கத்திறன் பற்றிய ஆராய்வுகள் ஆரம்பமாகியது. தொடர்ந்து பல உளவியலாளர்களால் ஆக்கத்திறன பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

"மனித அனுபவங்களில் நுண்ணறிவு வட்டத்திற்குள் புதுமை, பெறுமானங்கள் ஆகியவற்றைக் கொண்ட பங்களிப்புக்களின் விளைவாக ஏற்படும் செயற்பாடுகளைக் குறிப்பதற்கு ஆக்கத்திறன் எனும் சொல் பயன் படுகிறது என விஸ்னர் என் பவர் வரைவிலக்கணம் கொடுத்துள்ளார்.

ஆக்கத்திறன் என்பது நெகிழும் தன்மை, புதியன புனையும் திறன், நுண்ணறிவு ஆகியவற்றின் சேர்க்கையாகும். இது ஒரு சிந்தனையாளரின் வழமையான சிந்தனைத் தொடரிலிருந்து விலகி வேறுபட்ட ஆக்கபூர்வமான சிந்தனைக்கு வழிவகுக்கின்றது. அதன் விளைவு அவருக்கும் ஏனையோருக்கும் திருப்தியளிக்கின்றது.

மாஸ்லோவின் கருத்துப்படி ஆக்கத்திறன் படைத்தவர்களின் தனிப்பண்புகளாகத் தைரியம், துணிவு, சுய ஏற்புடைமை, சுயமான இயக்கம் என்பவற்றைப் பட்டியல்படுத்தியுள்ளார். சமூகம் ஏற்றுக்கொண்ட சிறந்த சிந்தனையாளர்கள் மட்டுமன்றி சிறந்த சமையல் செய்யும் பெண்கூட ஆக்கத்திறனுடையவராக இருக்கலாம் என மாஸ்லோ குறிப்பிடுகின்றார்.

வேர்னன் என்பவர் கருத்துப்படி ஆக்கத்திறன் என்பது சமூக, ஆன்மீக, அழகியல், விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப பெறுமதியுடையது என ஏற்றுக் கொள்ளப்படும் புதிய கருத்துக்கள், அகக்காட்சிகள், நோக்கங்கள் அல்லது அழகியல் பொருட்களை உருவாக்கக் கூடிய மனிதனது ஆற்றலாகும.

ஆக்கத்திறனுள்ள தனியாட்களின் வரலாற்றுக் குறிப்புகள், அவர்களது தனிப்பட்ட குணவியல்புகள் என்பவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது ஆக்கத்திறனுடையவர்கள், தாமாக இயங்குபவர்கள், எண்ணத்திலும், மனத்திலும் சுதந்திரமானவர்கள், மரபுகளைச் சாராதவர்கள் மனப்பாங்குகளில் நெகிழ்ச்சியுடையவர்கள், எப்பொழுதும் விளையாடும் தன்மை உடையவர்கள், தீவிரத்தன்மையுடையவர்கள், சமூகத்தின் ஏனைய அம்சங்களிலிருந்து தனித்திருப்பவர்கள், அனுபவங்களை ஆதரிப்பவர்கள், அதிகாரத்தை விரும்பாதவர்கள் இவற்றுக்கப்பால் உயர் தன் மதிப்பை உடையவர்களாக, இருத்தல்போன்ற குணவியல்புகளுடன் தன்னம்பிக்கையையும் பெறுமதியையும் உடையவர்களாக இருப்பார்கள்.

ஆக்கத்திறனானது உடன் பிறந்தது. பரம்பரையானது கற்றல் அல்லது பயிற்சியின் மூலம் பெறமுடியாத விசேட உளச்சக்தி அல்லது தனித்துவமான அறிவு சார்ந்த ஆற்றல் ஆகும் என சிலர் கருதுகின்றனர். ஆனால் கெட்செல், டொரன்ஸ் என்போர் ஆக்கத்திறன் உள்ளார்ந்தது அல்லது உடன் பிறந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர்களது கருத்துப்படி, இது பெரும்பாலும் ஒரு கற்கப்பட்ட திறன். அதை உற்சாகப் படுத்துவதன் மூலமும் அங்கீகரிப்பதன் மூலமும் விருத்தி செய்யலாம். ஆனால் கவனியாது விடுமிடத்து அது அடக்கப்படுகின்றது. நிபந்தனைப்படுத்தப்படுவதால் ஆக்கத்திறன் அடிப்படையில் மக்களிடையே வேறுபாடுகள் இருக்கின்றன. எடிசன் என்பவர் 1% உள்ளுணர்வினாலும் 99% வியர்வையினாலுமே ஒருமேதை உருவாகின்றான் என்றார். கைப்பணியாள் ஒருவர் பயிற்சி, கடுமையான உழைப்பு என்பவற்றின் மூலமே வல்லுநராகின்றார். எழுத்தாளர் ஒருவர் நீண்ட காலமாக எழுதியபின்பே சிறந்த எழுத்தாளராகின்றார். விஞ்ஞானி களுங்கூட நீண்ட கால உழைப் பின் பின்னரே ஏதோவொன் றைக் கண்டுபிடிக்கின்றனர்.

சிறுவர்களின் உளத்தன்மைகளும் ஆக்கத்திறனும் நேரடித் தொடர்புடையவை எனச் சில, சிறுவர் சித்திர வல்லுநர்கள் நம்புகின்றனர். இவ்விடயம் தொடர்பாக மன்ஸ், லொவன் ஃபீல்ட் ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துக்களைக் கவனித்தல் பயனுடையதாகும். சித்திரங்களால் காட்டப்படும் மனச்சார்புகளின் அடிப்படையில் சிறுவர்களைப் பிரதானமான் இரு பிரிவுகளுக்குள் அடக்க முடியுமெனக் குறிப்பிடுகின்றனர்.

- ♦ கட்புல வகை (Visual)
- ♦ ஸ்பரிச வகை (Haptic)

**கட்புல வகையைச் சேர்ந்த சிறுவர்கள்**

ஆக்கம் தொடர்பான தூண்டுதல் சுற்றாடலின் மூலமே கிடைக்கின்றது. சுற்றாடலில் காணப்படும் பொருடகள், அங்கிகள், நிகழ்வுகள் ஆகியன தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணக்கருக்களை விருத்தி செய்வதில் கண்கள் பிரதான இடம் வகிக்கும்.

**ஸ்பரிச வகையைச் சேர்ந்த சிறுவர்கள்**

உடல் ரீதியாகக் கூர்மையான புலனுணர்வைக் காட்டுவர். அவர்களது கவனம் புறச் சூழலின் பால் செலுத்தப்படுவதில்லை. பொருளைத் தொட்டுப் பெறக்கூடிய உணர்வையும், தமது உள்ளுணர்வுகளையும் அவர்கள் வெளிக்காட்டுவர். எண்ணக்கருக்களை விருத்தி செய்வதில் தொடுகை முதலிடம் பெறுகின்றது. இவர்களைப் பொறுத்த மட்டில் கண்கள் பிரதான இடத்தை வகிப்பதில்லை.



கல்வித் தரிசனம்

இலங்கையில் நடைமுறையிலுள்ள முறைசார் கல்வி முறையில், குவிசிந்தனையும், அதிகாரக் கற்பித்தலும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. பாடசாலைக் கற்றலில் கல்வியில் அடைவே வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாம் நிலைக்கல்வி, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நாடெங்கும் நடத்தப்படும் க.பொ.த (சா.த) பரீட்சை க.பொ.த (உ.த) பரீட்சை என்பவற்றை இலக்காகக் கொண்டே கற்பித்தல் நிகழ்கின்றது. இந்தப் பரீட்சைகளில் உயர்தரங்களைப் பெறுவதே கற்றலின் குறிக்கோளாக இருப்பதாகத் தெரிகின்றது. பாடசாலைச் சூழலும் உயர்ந்த அடைவு பெறுவோருக்கு உதவுகின்றதேயொழிய ஆக்கத்திறன் உடையவர்களுக்கு அல்ல.

இன்று ஆரம்பப் பாடசாலைகள் செயல் சார்ந்த கற்றல் முறையைப் பின்பற்ற வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றன. ஆரம்பப் பாடசாலைகள் ஒரு பொதுக் கலைத்திட்டத்தைப் பின்பற்றிய போதிலும் அவற்றிலே நெகிழ்ச்சிக்கும் சிறிது இடமுள்ளது. ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் பிள்ளைகளிடம் ஆக்கத்திறன் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இடமுண்டு. ஆனாலும் வசதிகள், பாடசாலைச் சுற்றாடல், மாணவர்களின் புறத்தீடு, ஆசிரியர் என்னும் காரணிகள் நாடளாவிய ரீதியில் இடத்துக்கிடம் அதிகம் வேறுபடுகின்றன. பரீட்சைகளே கல்வித்திட்டத்தின் சிகரமாயின், மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கும், நெகிழ்ச்சி நிகழ்வதற்கும் சிறிதளவே இடம் இருக்கிறது.

இலங்கையில் ஏறத்தாழ எல்லாப்பாடசாலைகளும்கலைத் திட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்றன. நாடகப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், இலக்கியச் செயற்பாடுகள், ஓவியச் செயற்பாடுகள், ஓவியக்கண்காட்சி, விஞ்ஞான தினக் கொண்டாட்டம் போன்றவை கிட்டத்தட்ட நகர்ப்புறப் பாடசாலைகள் எல்லாவற்றிலும் பல கிராமப்புறப் பாடசாலைகளிலும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் பிள்ளைகளின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உதவுகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும்சில பாடசாலைகள் கலைத்திட்டத்திற்குப் புறம்பான எவ்வித செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துவதில்லை.

பிள்ளைகளின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு சாதாரண



வகுப்பறை நடைமுறைகள் தடையாகவே அமையும.

1.நெகிழ்பண்பு இல்லாத கால அட்டவணை ஆக்கத்திறனுக்குரிய செயற்பாடுகளை செய்வதற்கு போதுமான நேரத்தை பாடவேளைகள் கொண்டிருப்பதில்லை. பொதுவான கால அட்டவணை காணப்படுகிறது.

2.மாற்றம் ஏற்படுத்த முடியாத வகையில் மையநிலையில்வரையப்பட்ட கலைத்திட்டம்.

3.பரீட்சையில் வெற்றியை வலியுறுத்தல் - பாடசாலையில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நாடெங்கும் நடத்தப்படும் பரீட்சையில் உயர்பெறுபேறுகளை பெறுவதற்கே ஊக்குவிக்கப்படுகிறது.

4.அனுசரிப்பு பற்றிய ஆசிரியர்மனப்பாங்கு, வகுப்பறையில் ஆக்கத்திறனுடையவர்களை ஊக்குவிக்கும் ஆசிரியர் மனப்பாங்கு குறைவாகவுள்ளது.

5.தடையற்ற வகுப்பேற்றம், இதனால் எவ்வித முயற்சியுமின்றி மாணவர்கள் காணப்படுவர்.

**பாடசாலைப் பிள்ளைகளில் ஆக்கத்திறனை எவ்வாறு அதிகரிக்கச் செய்யலாம்?**

பரன் என்பவர் பிரித்தானிய பள்ளிக்கூடங்களைக் குறிப்பிட்டு ஆக்கத்திறன் மாற்றங்களைப் பாடசாலை முறைமையில் ஊக்குவிக்க வேண்டுமாயின் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் திசைநெறிப்படுத்துதல் தேவை என்றார். இந்தக் கருத்து எமது பாடசாலைகளைப் பொறுத்த வரையில்பொருத்தமாகவுள்ளது.

பியாஜே என்பவர் ஆரம்பப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஏராளமான அனுபவரீதியான பயிற்சிகள் தேவை என்றார். மேலும் பொருத்தமான விளையாட்டுப் பொருடகள், விளையாட்டுக்கள், புத்தகங்கள், அடுக்குக் கட்டைகள் போன்றவற்றையும்கையாளக்கூடிய வேறு விளையாட்டுப் பொருட்களையும் வழங்கினால் அது அவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்றார்.

பிள்ளைகளின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கு பின்வரும் முறைகளை பாடசாலைகளில் அறிமுகம் செய்யலாம்.

1.வினாக்கள்எழுப்புவதற்குப் பிள்ளைகளை ஊக்குவித்தல் அவர்கள் செயலற்ற நிலையில் ஆசிரியர்கூறுவதையே கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. டொரன்ஸின் என்பவரின் கருத்துப் படி, குழந்தைகள் வினாக்கள் எழுப்புவதற்கு உற்சாகப் படுத்தப்பட வேண்டும். அந்த வினாக்களுக்கு எதுவித அர்த்தமும் காணப்படாவிடின் ஆசிரியர் கேட்கப்படும் எல்லா வினாக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். குழந்தைகள் வினாக்கள் எழுப்ப உற்சாகப்படுத்தப்படுவதன் மூலம் அவர்கள் சரியான நோக்கில்சிந்திப்பதற்கு உற்சாகப் படுத்தப்படுவார்கள்.

2.பிள்ளைகள்புதுமை யான கருத்துக்களைக் கூறும் போது அவர்களின் சிந்தனைக்கு மதிப்பளித்தல்.

3.சுயகற்றல், செயற்றிட்ட வேலைகள் என்பவற்றை ஊக்குவித்தல்.

4.வாசிப்பதற்கு ஊக்கமளித்தல். எனவே பிள்ளைகள் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

5.சிந்திக்கும் திறனை விருத்தி செய்தல்.

6.பாடக்கலைத்திட்டத்திலிருந்தும் வேறுபட்ட, கவர்ச்சிகரமான தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.

7. ஆக்கத்திறனைப் பயிற்றுவதற்காக விசேட கல்வி அனுபவங்களை அறிமுகப படுத்துதல். உதாரணமாக, கலைத்திட்டத்துடன் ஆக்கபூர்வமான சிந்தனை வேலைகள், பிரச்சினை விடுவித்தல் வேலைகள், பல்வேறு இடைத் தொடர்புக்குழுக்கள் (Interact clubs) என்பவற்றைச்சேர்த்தல்

8.சாதாரண பாடசாலைக் கலைத்திட்டத்தில் பரிசோதனைதொடர்பானதிறந்த அணுகுமுறையைப் பின்பற்றல்.

அனுபவம் பிள்ளையினுடையதே. ஆக்க கருத்தும் பிள்ளையினுடையதே. சிந்தனையும் திறனும் பிள்ளையினுடையதே. செயலில் ஈடுபடுவதும் பிள்ளையே. அப்படியாயின் ஆசிரியர் செய்ய வேண்டியது,

- ♦ செயற்பாடுகளைத்திட்டமிடல்
- ♦ நல்லூக்கத்தை ஏற்படுத்துதல்.
- ♦ வகுப்பறையில் உகந்த சூழலை ஏற்படுத்துதல்.
- ♦ தேவையான சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுதல்.
- ♦ உபகரணப் பிரயோகம் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- ♦ பிள்ளையின் செயற்பாட்டை மதித்தல் போன்றவையாகும்.

இலங்கையில் ஏறத்தாழ அதிகமான பாடசாலைகளிலும் கலைத்திட்டத்திற்குப் புறம்பாக இணைபாடவிதானச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இருப்பினும் இவையும் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு போதுமானதாக அமையவில்லை. நுண்ணறிவானது 24 படைப்பாக்கத் திறன்களை கொண்டுள்ளது. எனவே ஆக்கத்திறன் வளர்க்கப்படும்போது நுண்ணறிவும் விருத்தியாக்கப்படும். இதனால் வகுப்பறைச் செயற்பாட்டில் ஆக்கத்திறன் சார் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

து. துசியந்தன்
MEd
சேவைக்கால ஆசிரிய
ஆலோசகர் (சித்திரம்
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் தாம் செய்வது என்ன என்று தெரிந்தே செய்கிறார்கள்!



வருவார். ஆனால், அவர் வருகையை யாரும் அரசியலாக்கக்கூடாது என்று பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்கள் அறிவித்துள்ளார்.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு வருகை தருவாரா, மாட்டாரா என்று கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக அலை மோதிய ஆரூடங்கள், கணிப்புகளைக் கடந்து இப்போது உறுதியாக கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் அறிவித்துவிட்டார்.

2015 ஜனவரி 13-15 திகதிகளில் அவரது வருகை இருக்கும் என்று உத்தியோகபூர்வமான அறிவிப்பு.

அத்துடன் அந்த அறிவிப்பில் சிறிய ஒரு இடைச்செருகலையும் அவர் வலிந்து சேர்த்துள்ளது கவனிக்கப்பட்டதா இல்லையா தெரியவில்லை.

எனினும் எமக்கு அந்த இடைச்செருகல் வசனம்தான் மிக முக்கியமானதாக இருக்கிறது.

போப் பிரான்சிஸ்ஸின் வருகையின் போது அரசியலை யாரும் ஆயுதமாக பயன்படுத்த வேண்டாம் என்பதே அந்த அறிவிப்பு.

புனித பாப்பரசரின் விஜயத்தை யாருமே அரசியலாக்கக்கூடாது என்ற பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களின் அறிவிப்புக்குப் பின்னால் சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக ஏதும் கருத்துக்கள் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களாலோ அல்லது வடக்கு- கிழக்கின் திருச்சபையாலோ அந்நேரத்தில் வெளியிட்டு விடப்படக்கூடாது என்ற மகாகரிசனை தெரிகிறது.

மல்கம் ரஞ்சித் அவர்களின் இந்த அறிவிப்பு சம்பந்தமாக பார்ப்பதற்கு முன்பாக, முதலில் ஒன்றை பொதுவாக புரிந்துகொள்ளுதல் மிக அவசியம்.

கடந்த காலங்களில் முழு இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புகளில் இருந்தவர்கள் எப்போதும் சிங்கள பேரினவாத அரசைக் காப்பதிலும் சிங்கள இனம் என்பதற்கே அதிக முன்னுரிமை கொடுத்ததும் வரலாற்றின் பக்கங்களில் பதிவாக இருக்கிறது.

மனுக்குலத்தின் பாவங்களுக்காக இரத்தம் சிந்திய இறைதூதரின் போதனைகளை ஒழுகுபவர்கள், போதிப்பவர்கள் இப்படி ஓர வஞ்சகமாக நடந்துகொள்வது எத்தனை பாவம் என்று தெரிந்துகொண்டே இதனை கடந்த காலங்களில் பேராயர்கள் செய்துள்ளார்கள்.

2009 ஒக்டோபர் 2 ஆம் திகதி அன்று கொழும்பின் அமெரிக்க தூதர் பெற்றீசியா பியுட்டினியஸை சந்தித்த மல்கம் ரஞ்சித் மஹிந்த ராஜபக்ச அரசுக்கு ஆதரவாக கலைத்ததும் போர்க்குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தினால் இலங்கையில் ஜனநாயகத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் இராணுவ புரட்சி ஏற்படும் என்று கூறியதாக விக்கிலீக்ஸ் ஆதாரத்துடன் வெளியிட்டது உண்மைதான் என்று நம்பவேண்டியதாக இருக்கிறது பேராயர் ரஞ்சித்தின் இப்போதைய அறிவிப்பை பார்க்கும்போது...

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் முள்முடி தரிக்க வைத்து, பாரச்சிலவை காவிட செய்து, சவுக்கால் அடித்து, தேவனின் குமாரன் கல்வாரி மலைக்கு கொண்டு செல்லப்படும்போது தமது வானக தந்தைக்கு விண்ணப்பித்தது போல தந்தையே இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும் என்று மன்னித்து மறந்துபோக எம்மால் முடியாது.

எனினும் வரலாற்றின் சில பக்கங்களை தெரிந்துகொள்ளுதல் நலம் என்பதற்காக சிலவற்றை இதோ தருகிறோம்....

இன்று பேராயர் மல்கம் ரஞ்சித் கூறிய அதே கருத்தையே இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன்னர் அரசியல்கூடாது என்று சொல்லிக்கொண்டு மௌனம் காத்ததால் இன்றுவரைக்கும் வரலாற்றின் பக்கங்களில் மிக மோசமான ஒரு போப் ஆகவும் அவலமாக சித்தரிக்கப்படுகிறார் பன்னிரண்டாம் பயஸ் என்ற போப்.

மல்கம் ரஞ்சித் அவர்களும் அத்தகைய ஒரு மௌனத்தையா விரும்புகிறார்? வரலாற்றை திரும்பிப் பார்ப்பது அனைவர்க்கும் நல்லதுதான்.

ஆட்சிக்கு வந்ததுமே யூத இனத்தின் மீதான அனைத்து வன்மங்களையும் சட்டமாக ஆக்குகிறான் கிட்லர். 1939 இல் திடுதிப்பென்று இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியதுமே கிட்லர் நிலைமையை தனக்கு சாதகமாக ஆக்கிக்கொண்டு யூதர்களை மானுட எதிரிகள் என்று அறிவிக்கின்றான்.

அப்போதும் வத்திகானின் போப் மௌனம். அரசியலாக்கக்கூடாது என்ற பெரு மௌனம். அதுவே கிட்லருக்கு இன்னும் துணிவையும் ஏன் என்று கேட்க யாருமே இல்லை என்ற தைரியத்தையும் கொடுத்து அவன் தொடர்கிறான்.

இயல்பாகவே மிகமிக அதிகமாக கத்தோலிக்கர்களை மக்களாக கொண்ட ஜேர்மனியில் எப்போதும் மக்கள் மத்தியில் வத்திகானின் போப் அவர்களின் செய்திகளுக்கும் கருத்துக்கும் ஒரு உயரிய இடம் உண்டு.

யூதர்களை மானுட எதிரிகளாக கிட்லர் அறிவித்தபோதே எதிர்ப்பு தெரிவித்திருந்தால் ஒருவேளை யூதப்படுகொலைகளை தடுத்திருக்கலாம் அல்லது குறைத்தே இருக்கலாம். ஆனால், பன்னிரண்டாம் பயஸ் அப்படி செய்யவில்லை. ஏனெனில் அரசியல் வேண்டாம் என்று.

1941 இல் யுத்தத்தின் அனைத்து சாதகங்களும் வெற்றிகளும் உறுதிப்படுத்தப்பட்டதும் கிட்லர் இறுதித் தீர்ப்பு ஒன்றை யூத மக்களுக்கு கொடுக்கிறான். ஐரோப்பா முழுதும் பரந்து வாழும் யூதர்களை ஒன்று திரட்டி படுகொலை செய்து முற்றாக துடைத்தெறிவது என்று...

அதற்கு முதல் யூதர்களின் மனித வலு முழுவதையும் பலாத்காரமாக பெற்றுக்கொள்ளும் கட்டாய உழைப்பு முகாம்களில் அடைப்பது என்றும் கிட்லர் தீர்மானிக்கிறான். அப்போதும் பன்னிரண்டாம் பயஸ் என்ற புனித தந்தை கடும் மௌனம்.

ஆஸ்விட்ஸ், டச்சாவ், புசன்வோல்ற், செம்னோவ், பெல்செக், மெடானொக் போன்ற தடுப்பு (கொலை) முகாம்களில் 24 மணி நேரமும் விச அறைகளில் யூத இன படுகொலை நடந்தேறியது.

ஐரோப்பா முழுதும் இருந்து தொடருந்துகளில் கொண்டு வரப்பட்டவர்கள் குடும்பம் குடும்பமாக கொல்லப்பட்டார்கள். ஏறத்தாள 38 லட்சம் யூதர்கள் இவ்வாறு விச அறைகளும் கொல்லப்பட்டார்கள்.

16 லட்சம் யூதர்கள் கட்டாய உழைப்பு மையங்களில் நோயினாலும் உணவின்றியும் கொல்லப்பட்டார்கள். எல்லாமாக 53 லட்சம் யூத இன மக்கள் கொல்லப்பட்டார்கள். அப்போதும் பன்னிரண்டாம் பயஸ் மௌனமாகவே இருந்தார்.

இவை எல்லாவற்றினதும் உச்சமாக 1943 அக்டோபர் 16 ஆம் திகதி மனுக்குல வரலாற்றின் மிக அவமான நாள். அந்த நாளில் இறைமகன் கிறிஸ்துவின் போதனைகளை பரப்ப என்றும் கடவுளின் பிரதிநிதியாக போப்பாண்டவர் இருக்கும் வத்திக்கானுக்குள்ளேயே நாசிகள் புகுந்து யூதர்களை இழுத்துச் சென்றார்கள்.

கிறிஸ்தவர்களாக மதம் மாறிய யூதர்களைக்கூட நாசிகள் விடவில்லை. மதநம்பிக்கை மாறினால் என்ன யூத இரத்தம் மாறாது என்று சொல்லியே யூதர்களை இழுத்துச் சென்றார்கள்.

இவற்றுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் ஏராளம் பாதிரியார்களும், ஆயர்களும் துணிவுடன் போராடினாலும்கூட மிகமிக உயர் மட்டமான போப்பாண்டவர் பன்னிரண்டாம் பயஸ் மௌனமாகவே இருந்தார்.

வத்திகானுக்குள் அந்த நாளில் மட்டும் அதிகமான பெண்கள், குழந்தைகள் உட்பட 1007 யூதர்கள் பிடிக்கப்பட்டார்கள்.

அவர்கள் உடனடியாகவே அஸ்விற்ஸ் முகாமுக்கு அனுபப்பட்டு, அவர்களில் 811 பேர் உடனடியாகவே விசவாயு அறைக்கு கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள்.

அப்போதும் பன்னிரண்டாம் பயஸ் ஏனோ மௌனம்தான். கடவுளின் பிரதிநிதி என்ற ஸ்தானத்தில் அமர்ந்திருந்த பன்னிரண்டாம் பயஸ் ஒரு கண்டனம், ஒரு எதிர்ப்பு தனது குரலில் தெரிவித்திருந்தால் அது இறை நம்பிக்கை மிகுந்த ஜேர்மனிய மக்கள் மத்தியிலும் கிட்லரின் படை மத்தியிலும் ஏராளம் எதிர்ப்புகளை நிச்சயமாக தோற்றுவித்து இருக்கும்.

இந்த யுத இன அழிப்பு ஒருவேளை தடுக்கப்பட்டும் இருக்கும். ஒரே ஒரு அறிவிப்பு வத்திகானின் அதிகாரபூர்வமான வானொலியில் இந்த யூத இனப்படுகொலைகளை நிறுத்துங்கள் என்று அறிவித்திருந்தால் வரலாறு வேறு விதமாக மாறியிருக்கலாம். அரசியல் வேண்டாம் என்ற மௌனம் எவ்வளவு மானுட கொலைகளை அனுமதித்திருக்கிறது பன்னிரண்டாம் பயஸின் மௌனத்தால்.

கம்யூனிசத்துக்கு எதிரான சக்தியாக விளங்கும் கிட்லரை விமர்சித்தால், கண்டித்தால் எங்கே கம்யூனிசம் ரஸ்யாவில் இருந்து ஐரோப்பா முழுதும் வந்துவிடுமோ அதனால் திருச்சபை கலைந்துவிடுமோ என்ற பயம் தான் அவரின் மௌனத்துக்கான காரணம்...

ஆனால், பன்னிரண்டாம் பயஸின் மௌனம் என்பது வரலாற்றின் மிக மோசமான ஒரு துரோகம். மௌனம்கூட ஒருவிதத்தில் அநீதிகளுக்கான அங்கீகாரம்தான். அது மட்டுமல்லாமல் அவர் இந்த படுகொலைகளில் இறந்தவர்களின் ஆத்மசாந்தி அடைய பிரார்த்தனைகளைக்கூட நடாத்த ஒத்துக் கொள்ளவில்லை.

அதுமட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களாக மாறி குருமார்களாகவும் கன்னியாஸ்திரிகளாகவும் இருந்து வத்திக்கானில் இருந்து நாசிகளால் இழுத்து செல்லப்பட்டவர்களுக்காகக்கூட மதச்சடங்குகளை செய்ய ஒத்துக் கொள்ளவில்லை என்பதுதான் மிகப்பெரிய அவலம்.

யூத படுகொலைகளை கண்டிக்க மறுத்ததற்காக போப்பாண்டவர் பன்னிரண்டாம் பயஸுக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதத்தை வத்திக்கானுக்கான ஜேர்மனிய தூதர் 1943 அக்டோபர் 28 ஆம் திகதி வழங்கி கௌரவிக்கிறார். மௌனத்துக்கு பரிசு?

அரசியல் வேண்டாம், அரசை கண்டித்தால், அல்லது அரசு மீது போர்க்குற்றச்சாட்டு, விசாரணை என்று புறப்பட்டால் ஜனநாயகம் கெட்டுவிடும்; இராணுவ புரட்சி வரும் என்று சொல்லிச் சொல்லியே தமிழ் இனப்படுகொலையைப் பற்றி கதைக்கவோ கண்டிக்கவோ மறுப்பவர்கள் பன்னிரண்டாம் பயஸ் போன்றவர்களே... அப்போது கம்யூனிசப்பூச்சாண்டி காட்டி போப்பாண்டவர் இனப் படுகொலைக்கு மௌன அங்கீகாரம் வழங்கினார்.


இன்று சீனா வந்துவிடும் என்று பூச்சாண்டி காட்டிக் காட்டியே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை காப்பாற்றுகிறார்களா? அவர்கள் எல்லோருக்கும் சேர்த்தே உலகின் மிகப் பெரும் விஞ்ஞானியும் சார்பியல் தத்துவத்தின் தந்தையுமான ஐன்ஸ்ரின் இந்த யூத இன அழிப்பை மௌனமாக பார்த்துக்கொண்டிருக் கும் அனைவரும் நாளை வரலாற்றின் முன்னால் குற்றவாளிகளாக நிற்க வேண்டி இருக்கும் என்று கூறினார்.

*ச.ச.முத்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலானது மிகவும் சவால் மிக்கது

## அமைச்சர் டியூ தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தல் சவால் மிக்கதாகவே அமையும் என அமைச்சர் டியூகுணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களை விடவும் இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் கடுமையான போட்டி நிலவக்கூடுமென அவர் தெரிவித்தார்.

இரண்டாம் விருப்பத்தெரிவுக்கான பிரசாரங்களில் அனைத்து கட்சிகளும் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார்.

கள நிலவரங்களை கருத்திற்கொண்டு அனைத்து கட்சிகளும் தந்திரோபாயங்கள் வகுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளத் தவறினால் இரண்டாம் விருப்புத் தெரிவு எண்ணப்படும்.

எனவே, இரண்டாம் விருப்புத் தெரிவு இம்முறை ஜனாதிபதி தேர்தலில் மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது.

பெரும்பாலும் அனைத்து பிரதான கட்சிகளும் சிறுப்பான்மை வாக்காளர்களின் இரண்டாம் விருப்புத் தெரிவினை இலக்கு வைத்து பிரசாரம் மேற்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி, மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தனி வேட்பாளர்களை நிறுத்தினால் இரண்டாம் விருப்புத் தெரிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## நீதியரசர் வத்திக்கான் சென்றது நீதித்துறைக்கு பெரும் பாதிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதித்துறையின் சுதந்திரத்தை வெகுவாக பாதிக்கச் செய்துள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதியின் தலைமையில் வத்திக்கான் சென்ற அரசியல்வாதிகளுடன் மொஹான் பீரிஸ்ும் சென்றமையை சட்டத்தரணிகளின் கூட்டு அமைப்பு கண்டித்துள்ளது.

இந்தக்குழுவில் பிரதமநீதியரசர் மொஹான் பீரிஸ் இடம்பெற்றமையானது நீதிபதி ஒருவர், அரசியல்வாதிகளுடன் கொண்டுள்ள உறவைக் காட்டுவதுடன் அதிர்ச்சியை தரும் செய்தியாகவும் அமைநதுள்ளது என்று சட்டத்தரணிகளின் கூட்டு அமைப்பின் அமைப்பாளர் ஜெயசூரிய கிரிஷாந்த வெலியமுன தெரிவித்தார்.

இலங்கையில் அனைவரும் அனைத்து உரிமைகளும் உள்ளன. இந்தநிலையில் மொஹான் பீரிஸ், தனித்து சென்று பாப்பரசரை சந்தித்திருக்க முடியும். எனினும் பீரிஸ் அரசியல்வாதிகளுடன் சென்று பாப்பரசரை சந்தித்தமை மிகவும் மோசமான செயல் என்று வெலியமுன குற்றம் சுமத்தி யுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள், அரசாங்கத்தின் வைபவங்களில் மற்றும் அமைச்சர்கள் பிரதியமைச்சர்களுடன் ஒரே மேடையில் பங்கேற்றமை முன்னாள் நீதியரசர்களின் காலத்தில் வெகுவாக காணக்கிடைத்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## பயிலுநர் நியமனக் கடிதம் பெறும் தொழில்நுட்ப பட்டதாரிகள் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

தங்க வேலாயுதம் அகிலன் 802883668V, ராஜா தினேஸ்குமார் 821234743 V, சிவமூர்த்தி சிந்துஜா 855132494V, மாரிமுத்து நல்லைமாமணி 836663454V, முத்துலிங்கம் கஜந்திரராஜா 801845150V, திருக்கேதீஸ்வரன் நீரஜா 828501313V, நாராயணசாமி மனோகரி 817421733V, தயாபரன் ரதீசன் 840520838V, சிறிஸ்கந்தராஜா சிவரஞ்சனி 846412255V, ஜெயரட்ணம் இந்துஜா 846072470V, மையவன் சுயானி 846842020V, பாலசுப்பிரமணியம் பிரேமினி 796803517V, கனகசபாபதி பாலசுபேஸ் 822874789V, ஆறுமுகம் ஜீவாயினி 807331612V, இராஜரட்ணம் ஜோய் ஜெயரஞ்சன் 810894580V, சுரேசானந்தன் ஜொயாலினி 855900726V, அன்ரனி அன்ஜெலா 828342363V, செல்வராஜா பிரபாகரன் 811612308V, உதயசேகரன் ரேணுமதி 806482013V, அம்பிகைபாலன் கலைமகள் 806574422V, கணபதிப்பிள்ளை சிறிதவயோகராஜா 853170186V, ஆறுமுகம் பிரியங்கன் 843151213V, நடராஜா ஜனதா 797891231V, ஜேசுதாசன் கொண்கிளேடிய்ஸ் 782442392V, சுப்பிரமணியம் காயத்திரி 827301051V. புண்ணியமணியம் மாலினி 857022106V, குணரட்ணம் ஜெயநதினி 856313689V, கதிரவேலு புஸ்பாகரன் 822084192V, லக்மிதாசன் கஜானன் 832751308V, லீனஸ் ரஞ்சன் மரியதாசன் 863072484V, நித்தியகுமார் பிரியதர்சினி 877412598V, விமலன் வேலலழகன் 822602142V, தங்கவேல் கரிகாலன் 850022992V, ஜெயவிக்ரமன் ஜெயரட்ணம் 851034145V, சிவலிங்கம் அம்சுமால் 853492809V, கந்தசாமி குகநேசன் 842092019V, இராசையா சுகந்தன் 802312377V, குமாரசாமி சுஜீவன் 871553076V, ஸ்ரீபன் ஜெறின் 808632268V, பகீரதன் சோபனாம்பிகா 85829119V, பாலசுந்தரம் பொன்னபெருமாள் 840222110V, தேவராஜலிங்கம் ஜீவகி 827982148V, சிவராசா சிவரதி 85519188IV, கௌசிகன் வானதி 795652280V, மாசிலாமணி ரூபாஜினி 818285795V, தியாகராஜா கபீதா 867052070V, சின்னத்துரை றஜீதா 841632001V, இராமச்சந்திரன் சந்திரபாலா 802593376V, வசீகரன் தாழினி 835853470V, சிவஞானம் சஜீபா 876413655V, விஜேந்தன் தயாளினி 806223093 V, நவநீதன் கஜேந்தினி 795990488 V, தனலிங்கம் கௌசலா 797711225 V, செல்வராஜா செல்வகிரீசன் 790... V, கணபதிப்பிள்ளை சிவகங்கா 806061832 V, கனகலிங்கம் சஜீபன் 821891914 V, பரமேஸ்வரன் சாந்தி 836463889 V, மதிபாலசிங்கம் நிரஞ்சன் 781344818 V, ஏரம்பு சிவகணேசன் 781982377 V, சிவசுப்பிரமணியம் சஜந்தன் 800911311 V, கணபதிப்பிள்ளை வவேந்திரன் 803012750V, பஞ்சாட்சரம் பிரதீபா 817721508 V, தர்மபாலன் மதுமதி 817701698 V, ரூபஜெகன் லஜேந்தினி 817071520 V, ஆனந்த ராஜா யசோதினி 816943574 V, அன்பழகன் சாந்தகுமாரி 795042687V, சின்னத்தம்பி வனஜா 827261580 V, சிறினிவாசன் சிவாகினி 805013290V, பிரான்சிஸ் கிறிஷ் பெல்லா நிஷாந்தினி 817692478 V, ஜெகன் காந்திமதி 825180389 V, தியாகராஜா பிரதீபா 817182810 V, சிவகுமார் ராதிகா 805491329 V, மகேந்திரன் தனுஷியா 805492406V, இராஜரட்ணம் றொபின் ஜெயரூபன் 800334128 V, சீவரட்ணம் சிவதாஸன் 782074601 V, சண்முகநாதன் குமுதன் 792342205 V, மகேஸ்வரன் பிரபாகரன் 771180396V, கிருஸ்ணசாமி கிருபாலினி 796403101V, முத்துசாமிசர்மா ரகுநாதன் 803122849 V, இலங்கநாதன் பிரதீஸ் ... (இ)

# இன்று ஒரு தகவல்

## பார்வை உள்ளவர் யார்?

ஒரு தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஓர் உயரமான கல்லை நடுத்தெருவிலே நிறுத்தி வைத்து அதைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன விளையாட்டோ?

அவர்களுக்கே வெளிச்சம். கொஞ்ச நேரம் அப்படியே விளையாடிக் கொண்டிருந்தார்கள். விளையாட்டு முடிந்தது. அந்தக் கல்லை அப்படியே நடுத்தெருவில் விட்டு விட்டு அவரவர்கள் வீட்டுக்கு ஓடிப் போய் விட்டார்கள்.

அந்தக் கல் நடுத்தெருவில் அப்படியே நின்று கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்தில் அந்த வழியாக இரு பெண்கள் ஏதோ பேசிக் கொண்டே வந்தார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் கல்லை கவனிக்கவில்லை. அது காலில் இடித்து விட்டது. வலி தாங்க முடியவில்லை.

காலில் இடித்துக் கொண்ட பெண் திட்ட ஆரம்பித்தாள்.

"வரவர ஊர் உலகம் ரொம்ப கெட்டுப் போச்சு. யாருக்கும் கொஞ்சம் கூட பொறுப்பே கிடையாது. பாரு ... இப்படி நடுத்தெருவில் பொறுப்பில்லாமல் இந்தக் கல்லைப் போட்டு வைச்சிருக்கிறாங்களே... இது நியாயமா?" அக்கிரமம்.. அநியாயம்!

இப்படி இந்த சமூகத்தை கடுமையாக விமர்சனம் செய்து கொண்டே போய் விட்டார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு இளைஞன் அந்த வழியாக வந்தான். அந்தக் கல்லைப் பார்த்தான் நின்றான்.

ஒரு கணம் யோசித்தான்.

" என்ன பண்ணலாம் " என்று பார்த்தான். தன்னுடைய வீரத்தையும் உடல் வலிமையையும் காட்ட வேண்டும் என்று நினைத்தான். கொஞ்சம் பின்னால் போனான். பின்னர் வேகமாக ஓடிவந்தான். ஒரு சின்னத் துள்ளல்.

அப்படியே அந்தக் கல்லைத் தாண்டி அப்பால் குதித்தான். அதன் பின்னர் விசில் அடித்துக் கொண்டே ஒரு மாதிரியாக நடந்து போய்விட்டான்.

அடுத்த படியாக ஒரு காதல் ஜோடி அந்தப் பக்கம் வந்தது.

இருவரும் மிக நெருக்கமாக ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தபடி வந்து கொண்டு இருந்தார்கள். நடுத்தெருவில் நின்று கொண்டிருந்த கல் அவர்கள் கண்ணில் பட்டது.

அந்தக் கல் நடுவில் இருப்பதால் இருவரும் சற்று விலகி மறுபடி அந்தப் பக்கம் இணைந்து செல்ல வேண்டும்.

"கொஞ்ச விநாடிகள் நாம் பிரிய வேண்டி இருக்கிறதே" என்று வருத்தத்தோடு முணுமுணுத்துக் கொண்டே விலகினார்கள். பின் மறுபடியும் சேர்ந்தார்கள். அதன் பின்னர் அவர்கள் தங்கள் எதிர்கால கற்பனைகளை சுமந்த படி நடந்து சென்றார்கள்.

கடைசியாக அந்த வழியாக பார்வை இல்லாத ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவர் கையில் வழக்கமாக வைத்திருக்கின்ற அந்த வழிகாட்டும் ஊன்று கோல் இருந்தது.

கையில் இருக்கின்ற அந்த ஊன்று கோலால் தனக்கு முன்னால் அப்படியும் எப்படியும் தட்டிப் பார்த்துக் கொண்டே அவர் மெதுவாக நடந்து கொண்டிருந்தார். வழியிலே இருக்கின்ற கல் அவர் குற்றியிலே தட்டுப்பட்டது. உடனே அவர் நடுத்தெருவிலே கல் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டார். உடனே குனிந்தார். அந்தக் கல்லை தடவிப் பார்த்து மெல்லத் தூக்கி பாதை ஓரமாக போட்டார். அதன் பின்னர் நிம்மதியாக தன் வழியே அவர் நடந்து போனார்.

நண்பர்களே... இப்போது கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். அந்தப் பாதையில் கொஞ்ச நேரத்தில் பல பேர் வந்து போனார்கள். அவர்களில் பார்வை உள்ளவர் யார். பார்வை இல்லாதவர் யார். இப்படி ஒரு கேள்வியை கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? இன்றைக்கு பல பேர் அப்படித் தான் இருக்கிறார்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லைக்குள் ஊடுருவுவதற்கு தயார் நிலையில் 2000 தீவிரவாதிகள்



(டில்லி)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் இந்த மாதத்தின் முதல் ஒரு வார காலத்தில மட்டும் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய அத்து மீறிய தாக்குதலில் இதுவரை 6 பேர் பலியாகியுள்ளனர்.

எல்லைப் பாதுகாப்பு படையினர், பொதுமக்கள் உட்பட 50இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைநதுள்ளனர்.

பாகிஸ்தானின் இந்த அத்துமீறல்களுக்கு ஒரு முக்கிய உள்நோக்கம் இருப்பதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளன.

பாகிஸ்தான் இராணுவத தால் இரவு நேரங்களில் அவ்வப்போது நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல்களில் இந்திய வீரர்கள் நிலை குலையும் வேளையில், எல்லைக்கோட்டுப் பகுதியோரம் உள்ள பாகிஸ்தானுக்கு உட்பட்ட பகுதியில் தயார் நிலையில் இருக்கும் தீவிரவாதிகளை இந்தியூவுக்குள் ஊடுருவச் செய்து, அவர்களின் மூலமாக இந்திய மணணில் தீவிரவாதத்தை கட்டவிழ்த்து விட பாகிஸ்தான் தீட்டிவரும் சதித்திட்டம் தற்போது அம்பலமாகியுள்ளது.

இதற்காக, பாகிஸ்தானின ஆக்கிரமிப்பில் இருக்கும் காஷ்மீர் பகுதியில் 20 தீவிரவாத பயிற்சி முகாமகள் இயங்கி வருவதாகவும், இங்கு பயிற்சி பெற்ற 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள், எந்த நேரத்திலும் ஆயுதங்களுடன் இந்தியாவுககுள் ஊடுருவ தயார் நிலையில் இருப்பதாகவும், இந்த முயற்சியை முறியடிக்க இந்தியப் படைகள் விழிப்புணர்வுடன் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)




# பிரிட்டன் நாடாளுமன்றில் ஷாருக்கானுக்கு விருது



இந்தி நடிகர் ஷாருக்கானுக்கு சர்வதேச பன்முகத்தன்மை (குளோபல் டைவர் சிட்டி) விருது, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

உலக அளவில் பிரபலமாக விளங்குபவர்கள் மற்றும் குறிப்பிடத்தக்க சாதனை படைப்பவர்களுக்கு இந்த விருது ஆண்டுதோறும் வழங்கபபட்டு வருகிறது. இதறகு முனபு இந்த விருதை ஜாக்கிசான், அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய் உள்ளிட்டோர் பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா லண்டன் நகரில் உள்ள இங்கி லாந்து நாடாளுமன்றத்தில் கடந்த 4ஆம் திகதி நடந்தது. ஷாருக்கானிடம் விருதை இங்கிலாந்து நாடாளுமன்ற சபாநாயகர் ஜான் பெர்க்கோ வழங்கினார்.

இதுகுறித்து டுவிட்டரில் ஷாருக்கான் கூறும்போது, "இந்த விருது என்னை பெருமைப்பட வைத்துள்ளது. லண்டன் நாடாளுமன்ற அரங்கில் இந்த விருதைப் பெற்ற கணம் மிகவும் நெகிழ்ச்சி யோடு இருந்தேன்.

இங்கிலாந்து நாடாளுமன்ற சபாநாயகர், விருதுக் குழுவினர், விருதை வழங்கியரெயின்போ அறக கட்டளை உட்பட அனைவருக்கும் நன்றி" என்று தெரிவித்துள்ளார். (இ)

# ஒசாமாவின் உடலை மூழ்கடிக்க 140 கிலோ எடையுடைய சங்கிலி

ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு, அவரது உடலில் கிட்டத்தட்ட 140 கிலோ எடை கொண்ட சங்கிலி கட்டப்பட்டு கடலில் வீசப்பட்டதாக சிஐஏ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சிஐஏ இயக்குநரும், அமெரிக்க பாதுகாப்பு செயலருமான லியோன் பனேடா, சமீபத்தில் அமெரிக்க போர்கள் தொடர்பான புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

அதில், அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் பின்லேடன், அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்ட பிறகு, எவ்வாறு அவரது உடல் கடலில் வீசப்பட்டது என்பதை விபரித துள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு ஒசாமாவின் உடல் கார்ல் வில்சன் போர்க் கப்பலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இஸ்லாமிய முறைப்படி அவரது உடல் வெள்ளைத் துணியால் மறைக்கப்பட்டு, அரேபிய மொழியில் அவருக்கு இறுதிச் சடங்கு செய்யப்பட்டு, ஒரு கனமான பைக்குள் உடல் வைக்கப்பட்டது.

உடல் ஒழுங்காக மூழ்க வேண்டும் என்று 140 கிலோ (300 பவுண்ட்) எடையிலான சங்கிலியும் அந்த பையோடு இணைக்கப்பட்டது. ஒரு மேசையில் உடல் வைக்கப்பட்டு, அந்த மேசை கப்பலின் மேலடுக்கில் தடுப்புகளுக்கு பக்கத்தில் வைக்கப்பட்டது.மேசையை சாய்த்து உடலை கடலில் தள்ளும் போது, இருந்த எடையில் அநத மேசையும் கட லுக்குள் விழுந்துவிட்டது. உடல்மூழ்கிய பிறகு மேசை கடல் பரப்பில் மேலே மிதந்தது" என்று லியோன் விபரித்துள்ளார்.

பின்லேடனின் உடல் எந்தக் கடலில், எந்தக் குறிப்பிட்ட இடத்தில் மூழ்கடிக்கப்பட்டது என்ற விபரங்கள் இதுவரை இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பொறுபபேற்றதில் இருந்து இந்திய எல்லைக் கோட்டுப் பகுதியில் இதுவரை 20இறகும் மேறபட்ட அத்து மீறிய பெரிய தாக்குதல்களை பாகிஸ்தான் படைகள் நடத்தியுள்ளன.

பாகிஸ்தானுடன் இனி பேச்சு வார்த்தை கிடையாது என்று இந்திய அரசு அறிவித்துள்ள நிலையில், இதைப்போன்ற அத்துமீறல்களின் மூலம் இந்தியாவை மீண்டும் பேச்சு வார்த்தையின் பக்கம் திசை திருப்பும் வகையில், சமீபத்திய தாக்குதல்களை பாகிஸ்தான் அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

இந்திய நிலைகளின் மீது திடீர் தாக்குதல் நடத்தி பாதுகாப்பு படையினரை நிலைகுலையச் செய்துவரும் பாகிஸ்தான் படைகள், தற்போது எல்லைப் பகுதியில் குடியிருக்கும் அப்பாவி பொதுமக்களிடமும் கைவரிசையை காட்ட தொடங்கியுள்ளன.

பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய மோட்டார் ரக குண்டுகளை ஏவி பாகிஸ்தான் நடத்தி வரும் கொலை வெறி தாக்குதலுக்கு இந்திய வீரர்களும் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர்.

பாகிஸ்தானின் இந்த எல்லை மீறிய அத்துமீறலுக்கு பின்னணியில் இன்னொரு காரணமும் இருப்பதாக இந்திய இராணுவ உளவு வட்டாரங்கள் கருதுகின்றன.


காஷ்மீர் பகுதியில் அடர்ந்த பனிக்காலம் தொடங்குவதற்குள் இந்த தீவிரவாதிகளை எல்லாம் எப்படியாவது இந்தியப் பகுதிக்குள் ஊடுருவச் செய்து விட வேண்டும் என்று பாகிஸ்தான் துடியாய் துடிக்கின்றது.

இந்நிலையில், எல்லை கோட்டுப் பகுதி வழியாக இந்தியாவுக்குள் நேற்று முந்தி னம் ஊடுருவ முயன்ற 18 தீவிரவாதிகளை இந்திய பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என இராணுவ வடடாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸில் நான் இணைவேன்

## அடம்பிடிக்கும் இளைஞன்

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் சேர சென்ற 19 வயது அமெரிக்க இளைஞனை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர்.



அமெரிக்காவின் சிகாகோ நகரைச் சேர்ந்த முகமது ஹம்சா கான் (Moham med Hamzah Khan வயது-19) என்ற இளைஞன் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் சேர விரும்பியுள்ளான்.

இதற்காக கடந்த மாதம் 26ஆம் திகதி துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லுக்கு (Istanbul) விமான பயணச் சீட்டு ஒன்றை எடுத்துள்ளான்.

இந்நிலையில்கடந்த 4ஆம திகதி வியன்னா (Vienna) செல்ல சிகாகோவில் உள்ள ஓஹேர் (O'Harc) சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த அவரை எப்.பி.ஐ. (FBI) அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து அதிகாரிகள் அந்த இளைஞனின் வீட்டை சோதனை செய்ததில், அவன் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு ஆதரவு தெரிவித்து கையால் எழுதப்பட்ட பல ஆவணங்கள் சிக்கியுள்ளன.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள கானுக்கு அதிகபட்சமாக 15 ஆண்டுகள் சிறை தண்டனை கிடைக்கலாம் என கூறப்படுகிறது. (இ)

# சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சீனாவில் 300 பேர் படுகாயம்

(பீஜிங்)


சனாவில் நேற்று முன்தினம் இரவு சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இதில 300 பேர்படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியான யுனான் மாகாணத்தில் நேற்று முன்தினட் இரவு சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியின் கட்டடங்கள் இடிந்து தரைமட்டும் ஆகின.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6 ஆக பதிவாகி இருந்தது. இதில் சீனாவின் எல்லையோர மியான்மர் மற்றும் லாவோஸ் பகுதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. சுமார் 50ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். சேதம் குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (இ)



# ஈராக் தாக்குதலில் 17பேர் பலியாகினர்



ஈராக்கின் அப்பாசியா பகுதியில் ஷியா பிரிவைச் சேர்ந்த துணை இராணுவப் படையினர் மீது வெடி பொருட்கள் நிரம்பிய காரை மோதி நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் இத் தாக்குதலை நட்த்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இராணுவத்துக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட படையில், ஷியா பிரிவினர் பணியாற்றி வந்தனர். ஐ.எஸ. ஐ.எஸ் தீவிரவாதிகள் ஊடுருவதைக் தடுக்க இந்த படை அமைக்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயிலில் நடைபயணம் செய்யும் ஜெ!








ஜெயசிம்ஹா

“பரப்பன அக்ரஹாரா சிறையில் விதவிதமான காலை உணவுகளை கர்நாடக அரசு வழங்கி வருகிறது. திங்கள் கிழமை உப்புமா, செவ்வாய்க்கிழமை டிச்ச அவல் சாதம் புதன்கி ழமை எலுமிச்சை சாதம், வியா ழக் கிழமை வெஜிட பிள் புலாவ், வெள்ளிக் கிழமை உப்புமா, சனிக்கிழமை இடிச்ச அவல் சாதம், ஞாயிற்றுக்கிழமை புளி-யோதரை ஆகியவை வழங்குகிறோம்.”

செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் இருக்கிறார் ஜெயலலிதா. தமிழக முதல்வர் பன்னீர் செல்வம் உட்பட யாரையும் அவர் சந்திக்கவில்லை. சிறைக்குள் அவர் எப்படி இருக்கிறார், என்ன நினைக்கிறார், என்ன செய்கிறார் என்று நேரடியாக பதில் சொல்லக்கூடிய ஒரே நபர் ஜெயசிம்ஹா!

ஜெயலலிதா அடைக்கபட்டிருக்கும் பரப்பன அக்ர ஹாரா சிறையின்டிஐஜி-யான அவரை நேரில் சந்தித்த போது.

**“பரப்பன அக்ர ஹாரா சிறையில் மொத்தம் எத்தனை பெண் கைதிகள் இருக்கிறார்கள்?”**

“விசாரணைக் கைதிகள் 89 பேர். குற்றம் நிரூபிக்கப்பட்ட கைதிகள் 46 பேர். மொத்தம் 135 கைதிகள் இருக்கிறார்கள். இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி ஆகியோரும் அடக்கம்.

கர்நாடக மாநிலத்திலேயே அதிக அளவு பெண்கள் அடைக்கப்பட்டிருக்கும் சிறை இதுதான்.

**“எப்படி இருக்கிறார் ஜெயலலிதா?”**

“அவர் மிகவும் நன்றாக இருக்கிறார். சுகர், பிரஷர் சீராக இருக்கிறது. 24 மணி நேரமும் சிறையில் உள்ள மருத்துவர்கள் குழு அலார்ட்டாக இருக்கிறது. 28ஆம் திகதி ஒருநாள் மட்டும் அவருடைய பர்ஷனல் டாக்டர் அவரை பரிசோதனை செய்ய அனுமதிக்கப்பட்டது.

வெளியில் இருந்து மருந்துக்கள் எடுத்துவர அனுமதி கொடுத்தோம். அதன் பிறகு சிறை வளாகத்தில் உள்ள டாக்டர்கள்தான் அவரைக் கண்காணித்து வருகிறார்கள்.

அதி காலையில் எழுந்து விடுகிறார். காலை ஆறு மணிக்கு அவர் அடைக்கப்பட்டிருக்கும் அறை திறக்கப்படும். மாலை ஆறு மணிக்கு அந்த அறையை அடைத்து விடுவோம். அவ ரது அறை திறக்கப்பட்டதும் அவர் வாக்கிங் செல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார். ஆனாலும் அதிக தூரம் அவர் நடப்பதில்லை.”

**“என்ன சாப்பிடுகிறார்?”**

“பெரும்பாலும் பிரட், சான ட்விச், பால், பழம் இவைகளைத்தான் சாப்பிடுகிறார். முதலில் வெளியில் இருந்து உணவு கொண்டு வரப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு வெளியில் இருந்து உணவு வேண்டாம் என்று அவர் சொல்லிவிட்டார்.

மருத்துவர்களின் ஆலோசனைப் படி சிறை உணவுகளைச் சாப்பிட ஆரம்பித்து விட்டார். பரப்பன அக்ர ஹாரா சிறையில் விதவிதமான காலை உணவுகளை கர்நாடக அரசு வழங்கி வருகிறது. திங்கட்கிழமை உப்புமா, செவ்வாய்க்கிழமை இடிச்ச அவல் சாதம், புதன் கிழமை எலுமிச்சை சாதம், வியா ழக்கிழமை வெஜிடபிள் புலாவ், வெள்ளிக்கிழமை உப்புமா, சனிக்கிழமை இடிச்ச அவல் சாதம், ஞாயிற்றுக கிழமை புளியோதரை ஆகியவை வழங்குகிறோம். வழக்கமாக நாங்கள் கைதிகளுக்கு இந்த வரிசைப்படிதான் காலை உணவு கொடுப்போம். அதையேதான் ஜெய லலிதாவும் சாப்பிடுகிறார்.”

**“ஜெயிலுக்குள் ஜெயலலிதாவுக்கு சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கபபட்டுள்ளதா?”**

“அப்படி எதுவும் செய்து தரப்படவில்லை. வி.வி.ஐ.பி கைதிகளுக்கு என்ன வசதிகள் கொடுக்கப்படுமோ அவை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளுக்கு கொடுக்கப்படும் யூனிபோர்ம் மட்டும் அவருக்குக் கொடுக்கவில்லை.

அவருடைய வீட்டில் இருந்து எடுத்துவந்த உடைகளை அணிய அனு மதி கொடுத்திருக்கிறோம். காலை 8 மணிக்குப் பிறகு இரண்டு தமிழ்ப் பத்திரிகை களும் மூன்று ஆங்கில பத்திரிகைகளும் வழங்கப்படுகின்றன. அவற்றை அவர் முழுமையாக வாசிக்கிறார்.”

**“பார்வையாளர்கள் யாரையாவது ஜெயலலிதா சந்தித்தாரா?”**

“ஜெயலலிதா அவரைச் சந்தித்தார்... இவரைச் சந்தித்தார் என்று யூகமாக பல செய்திகள் வெளி வருகின்றன. ஆண்டவன் மீது சத்தியமாகச் சொல்கிறேன்... உளளே வந்ததில் இருந்து இதுவரை அவர் பார்வையாளர்கள் யாரையும் சந்திக்கவே இலலை. ஜெயலலிதாவைச் சந்திக்க விரும்பி மனு போடும் அனைவரின் பட்டியலையும் அவரிடம் தினமும் கொடுக்கிறோம். வாங்கிப் படித்துப் பார்க்கிறார்.

“யாரையும் மீட் பணண விரும்பலை!” என்று சொல்லி விடுகிறார். சசிகலா, இளவரசி ஆகிய இருவரை யும் ஜெயலலிதா இருக்கும் பகுதிக்கே மாற்றிவிட்டோம். பகல் முழுவதும் சசிகலா வும், இளவரசியும் ஜெயலலிதாவின் அறையில்தான் இருக்கிறார்கள். மூவரும் நன்றாகப் பேசியபடி இருக்கிறார்கள். மாலை ஆறு மணி ஆனதும் மூவரையும் தனித்தனி அறையில் அடைத்துவிடுகிறோம்.

சசிகலாவும், இளவரசியும் மட்டும் அவர்களது வழக்கறிஞர்களைச் சந்தித்துப் பேசினார்கள். சுதாகரன் ஆண்கள் சிறையில் இருப்பதால், இவர்களோடு அவர் பேசவோ, சந்திக்கவோ வாய்ப்பு இல்லை. சுதாகரனைப் பார்க்கவும் நிறையப் பேர் வருகிறார்கள். அவர்களை அவர் சந்திக்கிறார்.”

**“உங்களிடம் ஜெயலலிதா பேசினாரா?”**

“நான் தினமும் ரவுண்ட்ஸ் செல்வேன். அப்போது அவரிடம் ஏதாவது ஜெயிலில் குறைகள் இருக்கிறதா... எப்படி இருக்கிறீர்கள் என்று விசாரித்தேன்.

“தமிழ் நாட்டில் இருந்ததைவிட இங்கே நான் நன்றாக இருக்கிறேன். எனக்கு எந்தக் குறையும் இல்லை.

என் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது’ என்று சொன்னார்.

**“ஜெயலலிதா, சிறைகுள் ஸ்பெஷலான ஓர் அறைக்கு மாற்றப்பட்டதாகவும், அங்கே ஏ.சி உட்பட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல் வருகிறதே?”**

“அத்தனையும் தவறான தகவல்கள். 27ஆம் திகதிஅவர எந்த அறையில் அடைக்கப் பட்டாரோ அதே அறையில் தான் இப்போதும் இருக் கிறார். இந்தியாவில் எந்த ஜெயிலி லும் ஏ.சி கிடையாது. அப்படி யிருக்க இங்கே மட்டும் எப்படி ஏ.சி இருக்கும்?”

**ஜூனியர் விகடன்**

## எபோலா வைரசை அழிக்கும் ரோபோ

### அமெரிக்க நிறுவனம் தயாரிப்பு

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பரவும் ‘எபோலா’ என்ற நோய் சர்வதேச நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இந்த நோய் ‘எபோலா’ என்ற கொடிய வைரஸ்களால் பரவுகறது.

எனவே, அந்த வைரஸ் கிருமிகளை அழிக்க புதிதாக ஒரு ‘ரோபோ’வை அமெரிக்காவின் டெக்சாசில் உள்ள ஒரு நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த ரோபோ வைத்திய சாலையில் உள்ள அறைகளை 5 நிமிடத்தில் துடைத்து சுத்தப்படுத்தி ‘எபோலா’ நோயை உருவாக்கும்வைரஸ் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டது. இந்த ரோபோவுக்கு ‘லிட்டில் மொயே’ என பெயரிட்டுள்ளனர்.

‘ரோபோ’ மூலம் அல்ட்ரா வயலட் கதிர்களை பாய்ச்சி வைரஸ் கிருமிகள் அழிக்கப்படுவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். டெக்சாசில் உள்ள டல்லாஸ் இல் இந்த ‘ரோபோ’ பயன் படுத்தப்படுகிறது. (இ)

## என்னை கொலை செய்வதற்கு 12 தடவை முயற்சி எடுக்கப்பட்டது

### சு.சுவாமி கூறினார்

ஜெயலலிதாவுக்கு நான்கு வருட சிறைத்தண்டனை வழாங்கியதன் மூலம் இந்தியாவில் ஜனநாயகத்துக்கு புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.

இதன்மூலம் இந்தியாவில் எதிர்காலத்தில் சுபீட்சமான ஜனநாயகம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் அரசாங்க த்தரப்பு செய்தித்தாள் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஜெயலலிதா சிறையில் இருந்து வெளியில் வர மாட்டார் என்றும் அவர் தெரிவித்தார் .

ஜெயலலிதாவின் உதவியுடனேயே தாம் அரசியலுக்கு வந்ததாக கூறப்பட்டாலும் தாம் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கருணாநிதியின் ஆட்சியை கவிழ்ப்பதற்காகவே ஜெயலலிதாவுடன் இணைந்து செயற்பட்டதாக சுவாமி தெரிசவித்தார்

கருணாநிதிக்கு பயந்து ஜெயலலிதா,. ஐதராபாத்தில் ஒளிந்திருந்தபோது தாமே அவரை சென்னைக்கு அழைத்து வரவும் இசெட் பாதுகாப்பை வழங்கவும் கருணாறநிதியினால் சீல் வைக்கப்பட்ட அ.தி.மு.க அலுவலகத்தை திறக்கவும் ஏற்பாடுகளை செய்ததாக சுவாமி தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து ஏற்பட்ட அனுதாபத்தினால் ஜெயலலிதாவினால் அன்று ஆட்சியை அமைக்க முடிந்தது.

அன்று முதல் அவர் சர்வாதிகாரியாகவும் பணத்துக்கு அடிமையான வராகவும் மாறினார்.

தம்மை ஜெயலலிதா 12 தடவை கொலை செய்ய முயற்சித்ததாகவும் அந்த முயற்சிகள் தோல்வி கண்டதாகவும் சுவாமி மேலும் வாய் மலர்ந்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான சமுர்த்தி வாழ்வாதார கொடுப்பனவு வழங்குவதில் பாரபட்சம்

## கிளிநொச்சி மேற்கு கிராம மக்கள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் சமுர்த்தி வாழ்வாதார கொடுப்பனவுகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மேற்கு கிராமங்களைச் சேர்ந்த வறுமைக கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கென வழங்கப்படும் சமுர்த்தி வாழ்வாதார கொடுப்பனவுகள் வழங்கப்படுவதலேயே பாரபட்சம் காட்டப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் ஆகிய கிராமங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் காணப்படுகின்ற போதிலும் அக்குடும்பங்களுக்கான பதிவுகள் சமுர்த்தி உத்தியோகத்தர்களினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட போதிலும் அவர்களுக்கான சமுர்த்தி வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை மேற்குறித்த கிராமங்களில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள், வாகன உரிமையாளர்கள், வெளிநாடுகளில் பிள்ளைகள் வசிக்கும் குடும்பங்கள், இடப்பெயர்விற்கு முன்னர் குறித்த கிராமங்களில் வசித்து வன்னி யுத்தத்தை அடுத்து வெளி மாவட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்கள் ஆகியோருக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஐந்து வருடங்களுக்கான பொருளாதார அபிவிருத்தி திட்டத்தில் இரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 750 ரூபாவும் 3 தொடக்கம் 4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு ஆயிரத்து 200 ரூபாவும் 5 மற்றும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் 750 ரூபாவினை பணமாகப் பெறும் குடும்பத்திற்கு 595 ரூபாவும் ஆயிரத்து 200 ரூபாவினை பணமாகப் பெறும் குடும்பத்திற்கு 945 ரூபாவும் ஆயிரத்து 500 ரூபாவினை பணமாகப் பெறும் குடும்பத்திற்கு ஆயிரத்து 145 ரூபாவும் கொடுப்பனவு பெறும் குடும்பங்களுக்கு பணமாக வழங்கப்பட்டு மிகுதி பணமானது சமுர்த்தி வங்கியின் அவர்களது கட்டாய சேமிப்பு கணக்கில் வைப்பு செய்யப்படுகின்றது.

இந்த நான்கு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் தமக்கான சமுர்த்தி வாழ்வாதார கொடுப்பனவுகள் இதுவரை கிடைக்கப்படவில்லை என அந்தந்த கிராம சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் கடிதம் மூலம் தமது ஆதங்கத்தை எழுதிவழங்கிய போதும இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்நான்கு கிராமத்திலும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்க வேண்டிய நிலையுள்ள போதிலும் இன்றுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

எனவே குறித்த கிராமங்களுக்கான பிரதேச செயலர், வாழ்வின் எழுச்சி திணைக்கள அதிகாரிகள் இதுதொடர்பில் கூடிய அக்கறை செலுத்தி இக்கொடுப்பனவை பெற்றுதர ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)




## இந்துவின் மைந்தர்களினால் முல்லை. மாவட்ட மாணவர்களுக்கு வினாத்தாள் புத்தகங்கள்



யாழ் இந்துக் கல்லூரியின் 2005 இந்துவின்மைந்தர்களினால் முல்லைத்தீவிற்கான கல்விக்கான செயற்றிட்டம் ஒன்று அண்மையில் செயற்படுத்தப்பட்டது.

அந்த வகையில் முதன் நிகழ்வாக முல்லைத்தீவு வலைஞர்மடம் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு நான்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்விற்கு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், திருமதி.உ.முனீஸ்வரன், முல்லைத்தீவு பிரதி கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவன் ஆகியோர் மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தனர்.

இதேவேளை முள்ளியவாய்க்காலில் அமைந்துள்ள அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலய க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு வினாத்தாள் தொகுப்புகள் அடங்கிய புத்தகங்கள் வழங்கப்பட்டன.

அதேபோல் கொக்குளாய் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கும் கொக்குத் தொடுவாய் அ.த.க. பாடசாலை க.பொ.த சாதாரண தர மாண வர்களுக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இப் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களுக்கான புத்தகங்களை வழங்கினார்.

இதனை விட குரவில் தமிழ வித்தியாலயம், தேவி புரம அ.த.க பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் போன்ற பாடசாலை க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கும் வினாத்தாள் தொகுப்புகள் அடங்கிய புத்தகங்கள் வழங்கப்பட்டன. (2)

## இளைஞர் மீது தாக்குதல்

(குருமன்காடு)

வவுனியா வைரவபுளியங்குளத்தில் மதுபோதையில் நின்ற இளைஞர் மீது மற்றொரு இளைஞர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் பலத்த காயத்திற்குள்ளான இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வவுனியா வைரவபு ளியங்குளம் வைரவ கோவில் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் மதுபோதையில் நின்ற இளைஞர் மீது மற்றொரு இளைஞர் தாக்குதலை மேற்கொண்டார் . இதனால் முகம் மற்றும் கை என்பவற்றில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் ஏனைய இளைஞர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை அண்மைக்காலமாக வைரவபுளியங்குளம் பகுதியில் வேறு கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் வீதியில் கூடி தகாத வார்த்தைகளை பிரயோகித்து சண்டையிடுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

கிளிநொச்சி உழவனூர் தம்பிராசா சன சமூக நிலையத்தினால் தம் பிராசபுரத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் அறநெறிபாடசாலைமாணவர்களுக்கு சீருடையும் அற நெறி நூல்களும் இந்நிலையத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்ட போது...



# அரச உத்தியோகத்தருக்கு வருடம் ஒன்றிற்கு 3 சோடி இலவச புகையிரத ஆணைச்சிட்டை

(மல்லாவி)

கடந்த 24 வருடங்களின் பின்னர் யாழ்தேவி புகையிரதம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் புகையிரத சேவையினை கிளிநொச்சிக்கு வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில் அரசு உத்தியோகத்தர்களின் நலன் கருதி புகையிரத ஆணைச்சிட்டை பெற்றுக் கொள்வது தொடர்பான விளக்க குறிப்பொன்றை புகையிரத திணைகளம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புகையிர ஆணைச்சிட்டு தொடர்பான சுற்று நிருபத்தின் மூலம் ஓர் அரச உத்தியோகத்தர் தான் கடமையாற்றும் திணைக்களத்தின் ஊடாக புகையிரத ஆணைச்சிட்டை பெறுவதற்கான விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அதனைத் தான் பயணம் ஆரம்பிக்க இருக்கும் புகையிரத நிலையத்தில் ஒப்படைப்பதன் மூலம் பயணச் சிட்டை பெற்று பயணிக்கலாம்.

இதன்படி ஓர் அரசு உத்தியோகத்தர் வருடாவருடம் 3 சோடி இலவச புகையிரத ஆணைச் சிட்டை பெறும் உரிமையைப் பெற்றுள்ளார்.

இச்சீட்டையை அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கி வாழ்வோரும் பெறும் உரிமை உடையவர்களாகவுள்ளனர்.

உத்தியோகத்தரின் திருமணமாகாத பிள்ளைகள் மற்றும் பெற்றோர், திருமணமாகாத சகோதரர்கள் ஆகியோர் அவருடன் தங்கிவாழும் பட்சத்தில் அவருடன் தங்கி வாழ்கின்றார்கள் என கிராம சேவையாளருடன் பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்திய கடிதத்தினை கிராம கடமையாற்றும் திணைக்களத் தலைவரிடம் ஒப்படைத்து வருடா வருடம் 3 சோடி புகையிரத ஆணைச் சீட்டை பெற முடியும். கணவன்மனைவி ஆகிய இருவரும் அரச ஊழியர்களாயின் கணவன் மாத்தரம் இலவச புகையிரத ஆணைச்சிட்டைப் பெற முடியும்.

கணவனை விட மனைவி கூடிய சம்பளத்திட்டத்தை உடைய பதவியில் இருந்தால் மனைவியின் சம்பளத்திட்டத்தின் அடிப்படையில் புகையரத ஆணைச் சிட்டை கணவன் பெற முடியும்.

இதற்காக கணவன் தனது மனைவியின் சம்பள விபரத்தை மனைவியின் திணைக்களத்தலைவரைக்கொண்டு உறுதி செய்து தனது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இலவச புகையிரத ஆணைச்சீட்டிற்குரியவரே அச்சிட்டையில் பயணத்தை மேற்கொள்ளலாம். வேறு யாராவது பயணம் செய்து பிடிபட்டால் பயணம் செய்தவரும் ஆணைச்சிட்டை பெற்றுக் கொடுத்த அரச ஊழியரும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

புகையிரத ஆணைச்சிட்டை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தைதிணைக்களக் கலைவரின் ஊடாக பூர்த்தி செய்தவர்கள் ஏழு நாட்கள் வரை அதனை பயன்படுத்த முடியும்.

இது தொடர்பான ஏழு நிபந்தனைகள் அவ்விண்ணப்பப் படிவத்தின் மறுபுறுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

புகையிரதத்தில் பயணம் செய்யும் வகுப்பு நிலை முதலாம் வகுப்பு சிட்டையில் பதலி நிலை உத்தியோகத்தர்களும மற்றும் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களும் பயணம் செய்யலாம் இரண்டாம வகுப்பு நிலையில் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் பயணம் செய்யலாமென மேலும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை நாளை என்று சோம்பேறிகள் மட்டும்தான் சொல்வார்கள். இன்றைய நாளின் அருமையை உணர்ந்தவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
- வெஸ்லி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எம் புத்திஜீவிகளின் மௌனம் நீடித்தால் தமிழ் இனத்திற்கு பேராபத்து உண்டு

தமிழ்ப் புத்திஜீவிகளுக்கு அன்பு வணக்கம். தமிழினத்துக்கு ஏற்படப்போகும் பேராபத்தில் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இக் கடிதத்தை அவசரமாக எழுதுகிறோம். எங்கள் இனத்துக்கு ஆரோக்கியமான அரசியல் தலைமை இல்லை என்பது இப்போது நிறுத்திட்டமாகத் தெரிந்து விட்டது.

இந்த நிலைமை நீடித்தால் எல்லாமுமே படு தோல்வி ஆகிவிடும். இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் சர்வதேசம் கொண்டுள்ள கருசனையை நாங்களே எங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனையும் செய்யப் போவதில்லை என்பது தெளிவாயிற்று. ஒரு ஒழுங்கான தீர்வுத்திட்டமில்லை. ஐ.நா விசாரணைக் குழுவில் சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. வெறுமனே ஊடக அறிக்கையோடு தங்கள் கடமை முடிந்துவிட்டதாக கூட்டமைப்பினர் நினைக்கின்றனர். இவர்களுக்கிடையே ஒற்றுமை இல்லை என்பதை வடக்கு மாகாண சபையில் நடக்கும் சம்பவங்களும், அதன் உறுப்பினர்கள் ஆற்றும் உரைகளும் நிரூபணம் செய்கின்றன.

வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றினால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று சொன்னவர்கள் இப்போது பழைய இயக்கக் கதை கதைக்கிறார்கள். இவர்களை நம்பி வாக்களித்த தமிழ் மக்கள் பாவமென்றாயிற்று.

வடக்கு மாகாண சபையின் செயற்பாட்டிற்கு அரசு தடையாக இருக்கிறது என்பது உண்மையாயினும் செய்யக் கூடிய விடயங்களையாவது செய்யலாமல்லவா? அதைச் செய்வதில் இவர்களுக்கு இருக்கக் கூடிய தடைகள் என்ன?

எதிர்வரும் 12ஆம் திகதி வடமாகாணத்துக்கு வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிகழ்வுகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கலந்து கொள்வதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்காக கூட்டப்பட்ட கூட்டங்கள் முடிவுகள் எட்டப்படாமல் போனது எனில் இவர்களின் அரசியல் திராணி எப்படி உள்ளது?

ஜனாதிபதி வடபகுதிக்கு விஜயம் செய்யும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் கலந்து கொள்வதா? இல்லையா? என்ற முடிவை எடுப்பதில் கூட, இவர்களால் முடியவில்லை என்றால் வேறு எதில்தான் முடிவு எடுக்க முடியும்?

வடக்கு மாகாண சபைக்கான அரசை அமைத்த போது சத்தியப்பிரமாணத்தில் தொடங்கிய கோணல்கள் அமைச்சுப் பதவி; சபைத் தீர்மானங்கள்; உறுப்பினர்களின் உரைகள் என எங்கும் புரையோடியிருப்பதைக் காணமுடிகிறது.

நிலைமை இப்படியாக இருக்கும்போது, தமிழ்ப் புத்திஜீவிகள் தொடர்ந்தும் மௌனம்காத்தால் எங்களை நாங்களே அழித்து கொள்வதாகவே நிலைமை முடியும்.

ஒன்றில் புத்திஜீவிகள் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழிப்படுத்தும் ஆலோசனைச் சபையை அமைத்து ஆலோசனைச் சபை சொல்வதை மட்டுமே கூட்டமைப்பு செய்வதான ஏற்பாட்டை உருவாக்க வேண்டும். இதற்குக் கூட்டமைப்பினர் சம்மதிக்கவில்லை என்றால், புத்திஜீவிகள் இணைந்து தமிழர்களுக்கான அரசியல் தலைமையை அமைத்து அடுத்து தேர்தல் களத்தில் குதித்தாக வேண்டும்.

இல்லையேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவி ஆசையால்- ஒற்றுமையீனத்தால் தமிழர்களின் எதிர்காலம் மிகப் பெரும் பேராபத்தை சந்திக்கும். இவ்விடத்தில் புத்திஜீவிகள் தொடர்ந்தும் மௌனத்தைக் கடைப்பிடிப்பது ஆரோக்கியமானதல்ல.

# அதிகாரத்தை பகிர்வதற்கு பொது பல சேனா ஆதரவு

## ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்நாட்டின் அழுத்தம் காரணமாகவும் 13ஆவது திருத்தத்தின் உள்ளடக்கம் தெரியாததன் காரணமாகவும் அதனை அமுல்படுத்துமாறு பிரதமர் மோடி அழுத்தம் கொடுக்கின்றார்.

எனவே, விரைவில் மோடியை நாம் சந்திக்கவுள்ளோம். இவ்வாறு பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பு - கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பௌத்த நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது பல சேனா அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்கின்றோம். ஆனால், இந்தியாவினால் பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றோம். இதனால் இலங்கைக்கும் மக்களுக்கும் எதுவிதமான நன்மையும் கிடைக்கவில்லை.

இன்று நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் குறித்து பெரிய குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எதிர்க் கட்சிகள் தமது வேட்பாளர் யார் என்பது குறித்தே இன்னும் முடிவு செய்யாமல் இருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக் கொண்டால் அதன் தலைவர் ரணில் என்றும் பிறகு சோபித தேரர் என்றும் மாறி மாறி ஜனாதிபதி வேட்பாளர்களை அறிவித்து வருகின்றனர்.

எம்மைப் பொறுத்தவரை நாம் எந்தக் கட்சிக்கும் இதுவிடயத்தில் ஆதரவளிக்கப் போவதில்லை என்பதில் தெளிவாக இருக்கிறோம். ஏனெனில், எமக்கு நாட்டில் வாழுகின்ற சிங்கள - பௌத்த மக்களில் இருப்பே முக்கியமாகும். இவர்களைப் பாதுகாத்து இவர்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதே எமது ஒரே நோக்கமாகும்.

இதற்கெல்லாம் இணங்கக்கூடிய ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நியமக்கப்படுவாராயின் எமது ஆதரவை நிச்சயமாக அவ்ருக்குத் தெரிவிப்போம்.

இதேநேரத்தில், ஐக்கியத் தேசியக் கட்சியும் வீதி சமிக்ஞை விளக்கைப் போல வேட்பாளரை நொடிக்கு நொடி மாற்றிக் கொண்டிருக்காது மிக விரைவில் தங்கள் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து தெளிவாக அறிவித்தால் எமது நிலைப்பாட்டையும் அவர்களுக்கு தெரியப்படுத்துவோம்.

பொது பல சேனா அமைப்பானது அதிகாரப் பகிர்விற்கு ஒருபோதும் எதிரானது அல்ல. ஆனால், ஒன்றுக்கும் உதவாத - சிலரின் சுயலாபத்திற்காக கொண்டுவரப்பட்ட இந்த 13 ஆவது திருத்தத்திற்கு நாம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம்.

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை தொடர்பிலான ஆரோககியமான அணுகுமுறையைக் கையாள்கிறார். இதனை வரவேற்கின்றோம். ஆனால், தமிழ் நாட்டின் அழுத்தம் காரணமாகவும் 13ஆவது திருத்தத்தின் உள்ளடக்கம் தெரியாததன் காரணமாகவும் அதனை அமுல்படுத்துமாறு பிரதமர் மோடி அழுத்தம் கொடுக்கின்றார்.

எனவே, விரைவில் மோடியை நாம் சந்திக்கவுள்ளோம். இதன்போது பயனற்ற 13ஆவது திருத்தம் தொடர்பில் தெளிவுபடுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## பௌத்த பிக்குகள் அரசியல் ரீதியாக பிரிந்து செயற்படுவது பாதகமானது

### பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் அரசியல் ரீதியாக பிளவடைந்து செயற்படுவது பாதகமான நிலைமையை உருவாக்கும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அநுராதபுரம் கரப்பனே படிகொட்டுவாவ விஹாரையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பௌத்த பிக்குகள் பல்வேறு காரணங்களுக்காக பிரிந்து செயற்பட்டு வருகின்றனர். இதனால் பௌத்த மதத்திற்கு பாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டை பாதுகாப்பதற்கு நாட்டுக்கு தலைமை தாங்கியவர்கள் பௌத்த பிக்குகளேயாகும்.

எந்தவொரு காலத்திலும் சந்தேகத்துடன் அவர்கள் செயற்படவில்லை. தாய்நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த பௌத்த பிக்குகள் இருந்தார்கள்.

பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு பிக்குகளுக்கு இடையில் ஒற்றுமையை மேம்படுத்துவது அவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு நட்டஈடு

வடக்கில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்கும் நோக்கில் 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக கை, கால்களை இழந்தவர்கள் மற்றும் வீடுகள், சொத்துக்களை இழந்தவர்களுக்கு இவ்வாறு நட்ட ஈடு வழங்கப்பட உள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் 110 மில்லியன் ரூபாய் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

130 மில்லியன் ரூபாய் 1500 குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளதாகவும் எதிர்வரும் 12ஆம் திகதி இந்த நட்டஈடு வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நட்டஈடு வழங்கப்பட உள்ளது.

இதேவேளை, யுத்தம் காரணமாக சேதமடைந்த 100 வழிபாட்டுத் தலங்களை புழுது பார்க்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. (இ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் வி.சிவசக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## வர்த்தகத்தில் ஈடுபட வணிகர் கழகம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மக்களின் நலன்கருதி எதிர்வரும் 12 மற்றும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடைகளை திறந்து வர்த்தகம் செய்வதற்கு யாழ். வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது என வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ)


## சத்திய தரிசனம்



### தர்மம் கரைசேர்க்கும்

- கடமைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். ஏனென்றால் அதில் தான் உங்களின் முன்னேற்றம் அடங்கியிருக்கிறது.
- இளமை போனால் புற அழகு மறையும். நற்பண்புகளால் உண்டாகும் அகஅழகு என்றென்றும் நிலைக்கும்.
- கடவுள் கோயிலில் மட்டும் இருப்பதில்லை. தயை நிறைந்த உள்ளத்திலும் குடியிருக்கிறார்.
- தர்மத்தை நாம் காப்பாற்றினால் அந்த தர்மம் நம்மைக் காப்பாற்றி கரை சேர்க்கும்.
- மனிதப்பிறவி மறுபடியும் கிடைக்காமல் போகலாம். கிடைத்ததை நல்லமுறையில் பயன்படுத்துங்கள்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### நடப்பதனால் வரும் பயன்கள்

- இரத்தநாள இறுக்க நோய் உருவாவதை மட்டுப்படுத்த உதவுகிறது
- இரத்த ஓட்டம் மற்றும் இரத்த அழுத்த நிலையை மேம்படுத்துகிறது
- தசைகளுக்கு இயக்கத்திறனையும் வலிமையையும் தருகிறது
- உங்களுடைய சுறுசுறுப்பை அதிகரிக்கிறது
- உங்களது உடல் எரிக்கும் ஆற்றலின் அளவை மிகுதிப்படுத்துகிறது
- எலும்புகளுக்கு உரமூட்டி எலும்பு மென்பாடு நோயை மட்டுப்படுத்த உதவுகிறது.
- உங்கள் செயற்றிறனை அதிகரிக்க உதவுகிறது
- நீரிழிவு நோயைத் தவிர்க்க உதவுகிறது
- மனஇறுக்கம், பரபரப்பு ஆகியவற்றைக் குறைக்க உதவுகிறது
- உங்கள் மன ஆற்றலைப் பெருக்க உதவுகிறது
- தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகிறது
- முதுமையைத் தள்ளிப்போடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை அல்ஜின்னா வி.கழகத்தின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## முள்ளியவளை வித்தியா சம்பியன்

ஹஜ் பெருநாளினை முன்னிட்டு நீராவிப்பிட்டி முள்ளியவளை அல்ஜின்னா விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து முள்ளியவளை வித்தியா அணி அபார வெற்றியீட்டி சம்பியனாகியது.

இப்போட்டியின் அரை இறுதியாட்டங்களும் இறுதியாட்டமும் கடந்த செவ்வாய்க்கிழமை மாமூலை டைமன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.


முதல் அரை இறுதியாட்டத்தில் வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை வெற்றியீட்டி வித்தியா அணியினரும் இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் குமுழமுனை ஐக்கியவிளையாட்டுக்கழகத்தைவெற்றி கொண்டு வளர்மதி அணியினரும் இறுதியாட்டத்திற்கு தெரிவாகினர்.



இறுதியாட்டத்தின் போது நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட வித்தியா அணியின் அணித்தலைவர் அ.அஞ்சயன் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வித்தியா அணியினர் நிர்ணயிக்கப்பட்ட பத்துப் பந்துப் பரிமாற்ற நிறைவின்போது 6 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு 80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் இலக்கோடு துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணியினர் பத்துப் பந்து பரிமாற்ற நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டு தோல்வியடைந்தனர்.

இதன்மூலம் வித்தியா அணியினர் 42 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டி சம்பியனாக தெரிவாகினர். (க)

# தீவுகளுக்கான உதைபந்தாட்ட போட்டி புங்குடுதீவு நசரேத் வி.கழகம் முதலிடம்





வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகத்தால் தீவுகளுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி 2014 மூன்று நாட்களாக நடத்தப்பட்டிருந்தது.

28 கழகங்கள் பங்குபற்றியிருந்த நிலையில்இறுதிப்போட்டியில்முதலாம் இடத்தை புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது. இதற்கான வெற்றிக் கிண்ணத்தையும் 10 ஆயிரம்ரூபா பணப்பரிசிலையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணமும் 5 ஆயிரம் ரூபா பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதனிடையே சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், ஆட்ட நாயகன், மத்தியஸ்தர் ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதன்போது வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஸன், யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன், தீவுப்பகுதி உதைபந்தாட்ட கட்டுப்பாட்டு சபையின் தலைவர் வண.பிதா பீற்றர் அடிகளார் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்) முன்னாள் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர். (க)

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில்இடம்பெற்ற தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டிகளில் யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவி பீ.கல்சியா கலந்து கொண்டார். இவர்17 வயது பெண் களுக்கான ஈட்டிஎறிதல் நிகழ்வில் இவர் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.



## உதைபந்தாட்ட மத்தியஸ்தருக்கான பரீட்சை

புதிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர் தர பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் நடைபெற இருப்பதனால் வடமராட்சி லீக்கின் ஆளுகை பிரதேசத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றவிரும்புபவர்கள் வடமராட்சி லீக்கின் செயலாளருடன் தொடர்புகளை ஏற்படுத்துமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் வடமராட்சி லீக்கினால் ஒழுங்கு செய்து தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

# பாகிஸ்தானை வென்றது ஆஸி

## சுமித் கன்னிச் சதம்



பாகிஸ்தான் அணிக் கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா அணி 93 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகள்இடையேயான 3 ஒரு நாள் போடடித் தொடரில் முதல் ஆட்டம் சார்ஜாவில நேற்று முன தினம் பகல்-இரவாக நடைபெற்றது.

முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 255 ஓட்டங்கள் எடுத்தது.

ஸ்டீவன் சுமித் சிறப்பாக விளையாடி தனது முதல் சதத்தை அடித்தார். 39 ஆவது ஒரு நாள் போட் டியில் விளையாடிய அவருக்கு இது முதல் சதமாகும். சுமித் 101 ஓடடங்களும், [illegible] ஓட் டங்களும் எடுத்தனர். [illegible] 3 விககெட்டும், வகாப் ரியாஸ 2 விக்கெட் டும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியா வீரர்களின் அபாரமான பந்துவீச்சால் நிலை குலைந்தது.

பாகிஸ்தான் அணி 36.3 ஓவரில் 162 ஓட்டத்தில் சுருண்டது. இதனால் அவுஸ்திரேலியா 93 ஓட்ட வித தியாசத்தில் அபார வெற்றி பெறறது.

உமர் அக்மல் அதிகபட்சமாக 46 ஓட்டமும், சர்பிராஸ் அகமது 34 ஓட்டமும் எடுத்தனர். ஜான்சன் 3 விககெட்டும், லயன், மேக்ஸ் வெல் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலியாவின் சுமித் தெரிவானார். இந்த வெற்றி மூலம் 3 போட்டி கொண்ட தொடரில் அவுஸதிரேலியா 1:0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. 2 ஆவது ஆட்டம் வருகிற 10 ஆம்திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. இரு அணிகள் இடையேயான ஒரே ஒரு 20 ஓவர்போட்டியில் அவுஸ்திரேலியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமுவேல்ஸ் அதிரடி

# சொந்த மண்ணில் இந்தியாவை பந்தாடியது மேற்கிந்திய தீவுக

இந்திய- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

இதைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக அணித்தலைவர் வெய்ன் பிராவோ, டெவன் சிமித் களமிறங்கினர்.


வெய்ன் பிராவோ 17 ஓட்டங்களில் சமி பந்தில் தவானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து சிமித் 46 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஜடேஜா பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் டரன் பிராவோ 28 ஓட்டங்களில் நடையை கட்டினார். இதனையடுத்து மார்லன் சாமுவேல்ஸ், தினேஷ் ராம்தின் ஜோடி சேர்ந்தனர். இருவரும் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்டங்களை உயர்த்தினர்.


தினேஷ் ராம்தின் 61 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்க, மறு முனையில் மார்லன் சாமுவேல்ஸ் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இவர் 116 பந்துகளில் 126 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் 50 ஓவர் முடிவில் மேற்கிந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 321 ஓட்டங்கள் குவித்தது.

இதையடுத்து 322 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க வீரர்களாக அஜிங்கியா ரகானே, ஷிகர் தவான் களமிறங்கினர். 24 ரன்களில் ரகானே ரன் அவுட் ஆக, அடுத்து வந்த விராட் கோலி 2 ரன்களில் ஆ... அதிர்ச்சி அளித்தார். ராயுடு 13 ரன்களிலும், ரெய்னா ர... எடுக்காமலும் பெவிலியன் திரும்ப, இந்திய அணி 8... எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.



நெருக்கடியான நேரத்தில் ஷிகர் தவானுடன் கப்ட... களமிறங்கி நிதானமாக ஆட முற்பட்டார். ஆனால், 21 பந்... ரன்கள எடுத்த அவர், சமி பந்தில் போல்டாகி வெளியேறினா...




சதம் கடந்து ஆறுதல் அளித்த தவான், 68 ரன்களில் விக்கெட்டை இழந்தார். முன்னணி பேட்ஸ்மேன்கள் வெளியேறிய நிலையில், பின்கள வீரர்கள் விக்கெட்டைக் காப்பாற்ற போராடினர்.

புவனேஸ்வர் குமார் (2), மிஷ்ரா (5), மோகித்சர்மா (8), ஷமி (19) ஆகியோரும் சொற்ப ரன்களில் ஆட்ட மிழக்க, இந்தியா 197 ரன்களில் சுருண்டது. இதனால், மேற்கிந்திய தீவுகள் அணி 124 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன், ஒருநாள் போட்டித் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

## உலக கோப்பையில் ரகானே தொடக்க வீரர்-தோனி




காயம் காரணமாக ரோகித் சர்மா வெஸ்ட் இண்டிஸ் தொடரில் விளையாட்வில்லை. இதனால் ஷிகார் தவானுடன் ரகானே தொடக்க வீரராக களம் இறங்குகிறார்.

இதற்கிடையே உலக கிண்ண போட்டியில் ரகானே தொடக்க வீரராக விளையாடுவார் என்று கப்டன் தோனி தெரிவித்து உள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது,

தொடக்க வீரராக விளையாடுவதற்கு ரகானே மிகவும் பொருத்தமானவர் என்று நான் கருதுகிறேன். ஐ.பி.எல். போட்டிகளில் அவர் எந்தவிதமான ஆடுகளத்திலும் தொடக்க வீரராக சிறப்பாக விளையாடி இருக்கிறார். தொடக்க வீரருக்கு உரிய பொறுப்பு, கடமை அவரிடம் இருக்கிறது. இதற்காக ரோகித் சர்மா மிடில் ஓர்டருக்கு மாற்றப்படுவார் என்பதில்லை. இருவரும் தொடக்க வீரருக்கு பொருத்தமானவர்களே. சூழ்நிலையை பொறுத்து முடிவு செய்யப்படும். இவ்வாறு தோனி கூறியுள்ளார். (க)

## வவுனியா பிரஜைகள் குழு தலைவர் மீது தாக்குதல்

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் ஜெயக்குமாரியின் விடுதலையை வலியுறுத்தி நாளை வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெறவிருந்த நிலையில் வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் கிருஷ்ணபிள்ளை தேவராஜா நேற்று இரவு 7.30 மணியளவில் தாக்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது,

நெடுங்கேணியில் உள்ள எனது கடையை மூடிவிட்டு எனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது நெடுங்கேணிக்கும் பெரியகுளத்திற்கும் இடைப்பட்ட வயல்வெளிப்பிரதேசத்தில் வைத்து நான் தாக்கப்பட்டேன்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரில் இருவர் என்னை சிறிய கால்வாய் ஒன்றினுள் தள்ளி இரும்புக்கம்பிகளால் தாக்கினர். இதன் காரணமாக எனது கை மற்றும் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து என்னை தாக்கிய இரும்புக்கம்பிகளில் ஒன்றையும் எடுத்துக் கொண்டு நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது அவர்கள் வைத்தியசாலைக்கு செல்லுமாறு தெரிவித்தனர்.

இதனையடுத்து நான் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். அத்துடன் பொலிஸார் என்னிடம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (செ-4,250)

## ஐ.சி.சி மக்கள் தேர்வு விருது மத்யூஸ் பெயர் பரிந்துரை



எல்.ஜி சர்வதேச மக்கள் விருது வழங்கும் பட்டியலில் இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ் பெயர் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆண்டுக்கான எல்.ஜி சர்வதேச மக்கள் விருதுப் பட்டியலில் 5 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இங்கிலாந்து மகளிர் அணியின் அணித் தலைவி சார்லோட் எட்வர்ட்ஸ், அவுஸ்திரேலிய வேகபபந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன், இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார், இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ் மற்றும் தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் ஆகியோர் இதில் இடம்பிடித்துள்ளனர்.

இவர்களில் ஒருவருக்கு இந்த விருது வழங்கப்படும். இதற்கான வாக்களிப்பு முறை தொடங்கப்பட்டுள்ளது. இது இந்த மாதம் 30 திகதி வரை நடைபெறவுள்ளது.

வெற்றி பெற்ற வீரர் பெயரானது டுபாயில் உள்ள சர்வதேச கிரிக்கெட் சபை தலைமையிடத்தில் ஐ.சி.சி தலைமை நிர்வாகியான டேவிட் ரிச்சர்ட்சன் மற்றும் ஐ.சி.சி கிரிக்கெட் குழு தலைவர் அனில் கும்ளே ஆகியோர் முன்னிலையில் நவம்பர் 5-ம் திகதி அறிவிக்கப்படும்.

இந்த விருதானது அணியில் புதுமை, அழுத்தத்தின் போது செயல்படும் தன்மை, முடிவெடுக்கும் திறமை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வழங்கப்படுகிறது.

இந்த விருதினை ஏற்கெனவே சச்சின் (2010), சங்கக்கார (2011,2012) மற்றும் தோனி (2013) ஆகியோர் பெற்றுள்ளனர். (க)

## வார்த்தையில்...

:ண சபையை சுமுகமாக செயல்படுத்துவதற்கு அனுமதி இல்லை. அரசு வடக்கில் நடக்கும் எல்லாவற்றையும் தாமே செய்கிறோம் என்று காட்டவே முற்படுகிறது. சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொள்கிறது. வடக்கு மாகாணத்துக்கு இருக்கவேண்டிய அதிகாரத்தை வழங்குவதற்கும் அது தயாராக இல்லை. சர்வதேச அழுத்தம் காரணமாகவே வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டது. மத்திய அரசு மும்மொழிக் கொள்கையை பிரகடனப்படுத்தினாலும் அது தமிழ் மக்கள் பகுதிகளில் நடைமுறைக்கு இன்னமும் வரவில்லை. வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்த பொய்யான தகவல்களையே அரசு வெளியிட்டுவருகிறது. இவ்வாறான நெருக்கடிகளுக்குள்ளேயே நாம் செயற்பட்டுவருகிறோம் என்று அமெரிக்க பிரதிநிதிகளிடம் சுட்டிக் காட்டினேன் என்றார். (செ-11)

## இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து பிரியங்கா சோப்ரா குத்தாட்டம்

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடரின் பிரம்மாண்ட தொடக்க விழாவில் பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா நடனமாடவுள்ளார்.

ஐ.பி.எல் போன்று ஐ.எஸ்.எல் என்ற கால் பந்து தொடர் இந்தியாவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது வரும் 12-ம் திகதி தொடங்கவுள்ளது. இதற்கான பிரம்மாண்ட தொடக்க விழா கொல்கத்தாவில் நடைபெற இருக்கிறது.

அங்குள்ள விவேகானந்தா யுவ பாரதி கிரிரங்கம் மைதானத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள தொடக்க விழாவில் பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன், நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், தொழில் அதிபர்கள் முகேஷ் அம்பானி, நீதா அம்பானி என பல்வேறு பிரபலங்கள் கலந்துகொள்கிறார்கள்.

மேலும் இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ள பல்வேறு அணிகளின் உரிமையாளர்களான அபிஷேக் பச்சன் (சென்னையின் எப்.சி.) ரன்பீர் கபூர் (மும்பை), சல்மான் கான் (புணே), ஜோன் ஆப்ரஹாம் (குவஹாட்டி) வருண் தவன் (கோவா அணியின் தூதுவர்), சச்சின் டெண்டுல்கர் (கொச்சி), எம்.எஸ். தோனி (சென்னை), விராட் ஹோலி (கோவா), சௌரவ் கங்குலி (கொல்கத்தா) ஆகியோரும் இந்தத் தொடக்க விழாவில் கலந்துகொள்கிறார்கள்.

இதில் பாலிவுட் நட்சத்திரம் பிரியங்கா சோப்ரா, வருண் தவன் உள்ளிட்டோர் நடனமாடுகிறார்கள். இவர்கள் 500 துணை நடனக் கலைஞர்களுடன் விழாவை கலக்கவுள்ளனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக தீர்ப்பில்...

டர்கின்றன எனவும் அவர் ளார்.

மனித உரிமை குழுவின் தொடர்பான இரண்டு ப்பட்ட ஆய்வுகளின் பின் வாவில் அவர் நேற்று றிப்பிட்டுள்ளார்.

நேரம் நடைபெற்ற இந்த ழு, சில பிரச்சினைகள் விளக்கங்களை எழுப்பி

தாக குழுவின் ஆய்வில் றிய ஜெனிவாவுக்கான யின் தூதுவர் ரவிநாத் ங்க, இலங்கை இதனை டுதே காணாமல் போனவர் கள் தொடர்பான ஆணைக்குழுவை நியமித்து அதன் பதவி காலத்தையும் நீடித்துள்ளதாக கூறியிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்த ஆணைக்குழுவை நியமித்துள்ளதுடன் அதன் பணிகளை செய்ய அனுமதித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

முள்ளிவாய்க்கால் தினத்தில் தமிழர்கள் இறந்தவர்களை நினைவு கூர அனுமதி மறுக்கப்படுவது குறித்து வெளியிடப்பட்ட கவலை குறித்து பதிலளித்த, ஆரியசிங்க, அந்த தினத்தில் பயங்கரவாதிகள் மற்றும் அதன் தலைவர்களை நினைவு கூருவது பொருத்தமான விடயம் அல்ல என தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதை தவிர்த்ததாகவும் இராணுவத்தினர் முழுமையாக மனிதாபிமானத்தை மதிக்கும் சிறந்த ஒழுக்கங்களை கொண்டது இராணுவம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனாலும் இராணுவத்தின் மீது நியாயமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த நிலையிலும் இராணுவத்தின் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன.

அதேவேளை ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் சுதந்திரமான தமது செயற்பாடுகளை முன்னெடுக்க நாட்டில் அனுமதியில்லை என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஆரியசிங்க மறுத்துள்ளார்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்று கூடும் சுதந்திரம் என்பன முழுமையாக மதிக்கப்படுகிறது. எனினும் அந்த சுதந்திரம் சில சந்தர்ப்பங்களில் மீறப்படுவதுடன் அதற்கு பரிகாரம் உள்ளது எனவும் இலங்கை தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# உச்சநீதிமன்...

பொதுமக்களின் நலனைக் அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் அல்லது அரசியல் சாசன விடயங்கள் தொடர்பிலேயே ஜனாதிபதி சட்ட விளக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்விடயம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட தகுதி தொடர்பிலான பிரச்சினை என்பதனால், அவரால் உச்சநீதிமன்றத்தின் சட்ட விளக்கத்தை பெற்றுக் கொள்ள முடியாது.

இலங்கை ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் தனிப்பட்ட நபர்களிடம் விளக்கம் கோருவதில் தவறிலலை. எனினும் தனிப்பட்ட விடயங்களில் உச்சநீதிமன்றின் சட்ட விளக்கத்தை அவரால் கோர முடியாது.

இலங்கையின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் முன்கூட்டியே ஜனாதிபதியால் தேர்தலை நடத்த முடியாது.

அதேவேளை, இலங்கையின் அரசியல் சாசனம் தொடர்பில் மக்களுக்கு விளக்கம் அளிக்குமாறு ஜே.வி.பி எனக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை மகிழ்ச்சியுடன ஏற்றுக்கொண்டு எதிர்வரும் நாட்களில் அது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஜெயா சிறை...

வந்து நாடாளுவாங்க என்று கூறி பரப்பன அக்ரஹாரா வளாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார் ஒரு ஜோதிடர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் தணடனை விதிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா பெங்களூரில் உள்ள பரப்பன அக்ர ஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த செப்டம்பர் 27ஆம் திகதி முதல் இந்த சிறை வளாகத்தினை கோயில் போலவே மாற்றி வருகின்றனர் அ.தி.மு.க வினர். மொட்டை அடிப்பதும், தேங்காய் உடைப்பதும், சிறை வளாகத்திலேயே அங்கப் பிரதட்சணம் செய்வதும் என அமர்களப்படுத்தி வருகின்றனர் அ.தி.மு.க வினர்.

இந் நிலையில் பரப்பன அக்ர காரா சிறை வளாகத்துக்கு வெளியே ஜோதிடர் ஒருவர் சுற்றி வருகிறார். அவர் பெயர் நாகராஜாம். அம்மாவுக்கு இந்த தண்டனை கிடைக்க முக்கிய காரணம், அவர் 16.05.2011 அன்று பதவியேற்றதுதான்.

அந்த நாளும் நேரமும் சரியில்லை. அதனால் தான் இந்த சிறைத் தண்டனை கிடைத்துள்ளது என்று கூறி வருகிறார். இதை அவருக்கு ஏற்கெனவே 'பக்ஸ்" மூலம் அனுப்பினேன் என்று கூறி அந்த பேப்பர்களை கைகளில் ஆதாரமாக வைத்துக்கொண்டுள்ளார்.

வரும் 19ஆம் திகதிக்கு மேல் அவருக்கு ஜாமீன் கிடைத்து விடும். சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு முன்பை விட வேகமாக செயல்படுவார். மீண்டும் நாடாளுவார். அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை என்று சொல்லிக் கொண்டு இருந்தார்.

அம்மாவுக்கே ஜோதிடம் சொல்வதால், அவரைச் சுற்றி அ.தி.மு.க. வினர் கூடி நின்று அவரது ஜோதிடத்தை ஆர்வத்துடன் கேட்கின்றனர். இதனால் ஜோதிடரைச் சுற்றி எப்போதும் பரபரப்பாக கூட்டம் இருக கிறதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

# டிப்ளோமா...

தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு நியமனக் கடிதங்களினை வழங்கி வைத்தார்.

உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் 423 பேருக்கும், கிராம சேவையாளர்கள் 95 பேருக்கும், பயிற்சி கிராம சேவையாளர்கள் 33 பேருக்குமே இவ் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் நியமனம் வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

# மொழியுரிமை மீறப்பட்...

வின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் யாழ.மாவட்ட சிவில் சமூக உறுப்பினர்களிற்கான மனித வுரிமைகள் தொடர்பான பயிற்சி நேற்று இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய இணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில், யாழில் மொழி உரிமைகள் தொடர்பலான முறைப்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றது.

அரச நிறுவனங்கள், ஆசிரியர் சங்கங்கள் போன்றவற்றுக்கு சிங்கள மொழிகளில் கடிதங்கள் அனுப்பபடுவதாக கூறப்படுகின்றதே தவிர முறைப்பாடுகள் எவையும் பதிவு செய்யப்படவில்லை.

இனிவரும் காலங்களிலாவது இவ்வாறு மொழி உரிமை மறுக்கப்பட்டால் அல்லது மீறப்பட்டால் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினை பதிவுசெய்யுங்கள்.

மொழியுரிமை மீறல்கள் தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்த தயாராகவுள்ளோம் என்றார் அவர். (செ-4)

# ஐ.நா விசா...

போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு முன்னெடுக்கும் விசாரணைகளுக்கு பூரண ஆதரவு வழங்கப்படும் என பிரித்தானியா மீண்டும் உறுதி யளித்துள்ளது.

பிரித்தானியாவில் செயற்பட்டு வரும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடனான சந்திப்பின் போதே, பிரத்தானிய வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வாயர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வாயரை அந்நாட்டில் இயங்கி வரும் உலகத தமிழர் பேரவை உள்ளிட்ட புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழு முன்னெடுக்கும் விசாரணைகளுக்கு பூரண ஆதரவு வழங்கப் படும் என ஹியூகோ ஸ்வாயர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் பலவற்றை இலங்கை அரசாங்கம் தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# குற்றங்கள் குவிந்த நாட்...

மீறல்கள், ஒரு இனத்தின் தேசிய எல்லையில் மாற்றம் ஏற்படுத்தல் போன்றவை ஒரு நாட்டிற்குள் இடம் பெற்றால் அதனை கேள்விக்குட்படுத்துவதற்கு சர்வதேசத்திற்கு அதிகாரமுண்டு.

நாட்டிற்குள் பாரதூரமான மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்கின்றபோது அதனை உள்நாட்டு விடயம், எமது பிரச்சினை நாம் தீர்த்து வைப்போம் என கூறிக் கொண்டிருக்க முடியாது.

பாரதூரமான குற்றங்கள் இடம் பெற்றிருந்தால் சர்வதேசம் அதனை கட்டாயம் கேள்விக்குட்படுத்தும் உள்நாட்டு விடயம் என்று பார்த்துக் கொண்டிருக்காது என அவர் தெரிவித்தார்.

இப் பயிற்சிப்பட்டறையில் மனித வுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தி.கனகராஜ், பெண்கள் அமைப்புக்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் அரச உத்தியோகத்தர் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

# பல சேனாவின்...

உறவுகளைப் பேணும் உத்தேசம் எதுவும் கிடையாது என அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

பொது பல சேனா இயக்கத்துடன் தொடர்புகளை பேண எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என ராஸ்ட்ரிய ஸ்வாயம்செவக் சங்க என்ற அமைப்பின் பேச்சாளர் ராம் மாதவ் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பு சர்வதேச உறவுகளையோ அல்லது கூட்டுறவினையோ பேணியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது பல சேனாவின் கருத்து பிழையானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் பௌத்த மற்றும் சிவில் அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேண விரும்புவதாக பொது பல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். இஸ்லாமிய கடும் போக்கு வாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# வார்த்தையில்தான் ஜன...

தெரிவித்தார்.

இந்த சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, வடக்கு மற்றும் கிழக்கில் ஜனநாயகமாகச் செயற்பட அனுமதியில்லை இங்கே தேர்தல் நடைபெற்றது ஆனால் அதன் மூலம் உருவாக்கப பட்டுள்ள மாகா 19 ஆம் பக்கம் பார்க்க....

# எதிர்க்கட்சிகளுடன் ஒன்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊவா மாகாண சபை அக்கட்சி உறுப்பினரகளின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள ளார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஹரின் பெர்னாண்டோவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்துள்ளார். ராஜபக்ஷ படையணி உள்ளிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற செய்தியையே ஊவா மாகாண சபைத் தேர்தலினூடாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய ராஜபக்ஷ படையணியை ஆட்சியில் இருந்து விரட்டியடிக்க எமது கட்சி உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகள் மற்றும் அரசிலுள்ள சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டும். இது தொடர்பில் பல அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளும் தற்போது ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

குறிப்பாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து, அரசியலமைப்பின் 17-வது திருத்தச் சட்டத்தை மீண்டும நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த வரை முழு நாடும் ஒரு தேர்தல் தொகுதியாகும். இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பொறுப்புகளைக் கையேற்று, கட்சியை வெற்றி பெறச் செய்ய தொகுதி அமைப்பாளர்கள் முன்வர வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற கொண்டு வருகின்றோம். அரசாங்கம் தமது பண பலத்தைக் கொண்டு தேர்தலில் வெற்றிபெற முயற்சிக் கும் போது, நாம் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்து, தேர்தலில் வெற்றிபெற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இலங்கையை சிறந்த வெற்றியுடைய பூமியாக மாற்ற வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். ஆனால், இலங்கையை மக்களுடைய வெற்றிப் பூமியாக மாற்ற வேண்டும் என அவர் கூறவில்லை. இலங்கையை துஷ்டர்களின் வெற்றி நாடாக மாற்றவே ராஜபக்ஷ படையணி முயற்சிக்கிறது.

கிறிஸ் நோனிஸ் தாக்கப்பட்ட விவகாரத்தில் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தாதவர்களின் வெற்றி நாடாகவே 'இலங்கையை மாற்ற வேண்டும் என்பதே ராஜபக்ஷ படையணியின் நோக்கமாகும். இவ்வாறானதொரு நாடு எமக்குத் தேவையில்லை. மக்கள் இப்படியானதொரு நாட்டை எதிர்பார்க்கவில்லை. இந்தப் படையுணியின் தேவைக்கு ஏற்ப இந்த நாட்டை மாற்ற இடமளிக்க முடியாது.

அனைவரையும் ஒன்றிணைத்து, ராஜபக்ஷ படையணியின் இந்த நோக்கத்தைத் தோற்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். நாட்டில் மக்கள் வாழவேண்டிய நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக மகிந்த படையணியை விரட்டியடிக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


# மரண அறிவித்தல்



## சிவராஜா கிருபாகரன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சிவராஜா கிருபாகரன் நேற்று (08.10.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவராஜா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் துரைராஜா (C.T.B) - புவனேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், அமுதினி (சூட்டி) யின் பாசமிகு கணவரும், டீச்ஷா, திரிஷா, அபிஷேக்கின் அன்புத் தந்தையும், ராஜரதியின் சகோதரனும், கெங்கேஸ்வரனின் (கெங்கா) மைத்துனரும், லகோசனா, துஷாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : குடும்பத்தினர்
077 1530 979

(C-8699)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org